38

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

3 C JUI 40

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 வரு மார்ச்சு மீ 26 உ [No. 12.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 221
2. பிஸாரோ நாடகம் - (அங்கம்-2.களம்-3, 4)
R. B. Sheridan 223
3. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 226
4. சூளாமணி (உரையுடன்)
குமாரகாலச் சருக்கம் (33—41) 229
5. யாப்பிலக்கணம்—(கலித்தளை) 231
6. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 233
7. வர்த்தமானம் 239

## கலாநிலயம்

188910

### வாழ்வாங்கு வாழ்பவர். 10.

கண்டனவெலாம் கடவுளின் மோன உருவெளித் தோற்றமாகக் காணுமல், எல்லாம் தம் இன்பத்திற்குரிய பொருள்களென மதித்து அவ்வின்பத்திற்கு இடையூறு நேராமற் காக்கவல்லதெனக் கருதிக் கையாளும் அரசியலாதி முறைகளைத் துங்கடக்கரிய அடவியிற்முன் கொண்டுய்க்கும் என்னுமிவ்வுண்மை தனக்குச் சான்று தானேயாய் நிற்பதால் மற்றவர் உரைகளைக் கொணர்ந்து ஆதாரங் காட்டவேண்டுமென்பது இன்றியமையாததன்று. அமெரிக்கா முதலிய மேனுடுகளில் வாழ்க்கையின் நோக்கமும் போக்கும் எவ்வகையன என்பதைப் பன்முறை நாம் இவ்விதழ்களில் குறித்திருக்கின்றோம். அவைகளைச் சற்றே நினைவுபடுத்திக்கொள்ள உதவியாகும்பொருட்டுத்தான் ஷாமல்ஹௌஸேன் என்பவரது உரையினைச் சென்றவாரம் வரையலாயினோம்.

"பன்றி மந்தையேயன்றி யாங்கள் வேறொன்றுமல்லேம். எங்கள்பால் நாகரிகம்போல் தோன்றுவனவெல்லாம் அந்தத் தீய நாற்றத்தை மறைப்பதன் பொருட்டு மேலே அளவுகடந்து பூசிக்கொள்ளும் சில வாசனைப் பொருள்களே. எங்கள் நாகரிகமோ மிகவும் சிக்கலான வோர் காட்டுமிராண்டிச் செய்தி. பூந்துகில் போர்த்திய மிருகங்களல்லால் இந்நாள் நாகரிகத்தில் மனிதரென்னற்குரியாரில்லை. எம்முடைய அழுக்கடைந்த நாகரிகம், மூர்க்கம் பகை பொருமை வேற்றுமை, அநியாயம், சட்டப்படி நடக்கின்றதெனப் பேர்வைத்து அடிக்குங் கொள்ளைகள், தருமம் என்றபோல் நடக்கும் மாயப் பொய்வஞ்சனைகள், மதவேடப் போலிகள், சுயநயப் பேராசை, முதலியவைகளாலேயே வளர்க்கப்படுகின்றது. மாநுட இயற்கையில் கலந்துள்ள நல்லுணர்வும் உண்மையும் எப்பொழுதேனும் சிறிது தலைகாட்டுமெனின் அதனை அவமதித்து வெறுப்பதே கடனுகிவிட்டது. சட்டங்களின் தந்திரத்தாலும் பொய்த்தருமச் சூழ்ச்சியாலும் தக்கதெனப் பாராட்டப்படும்வண்ணம் தோன்றச்செய்திருக்கின்ற அதர்மங்களே, கொள்ளைகொள் எம் நாகரிகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நிறைந்திருக்கின்றன"

இம்மொழிகளைக் கேட்ட நாம் மனிதர் கதியை நினைத்துப் பரிவுகூரலாமே யல்லாது அமரிக்கரைச் சிறிதும் பரிகசித்தலாகாது. இந்தியர்கள்தாம் என்ன வாழ்கின்றார். பன்றிமந்தைகளே இன்னும் ஆய்விடவில்லை யெனினும், விடுதலை யென்றும் ஓட்டுரிமை என்றும் வர்த்தகக் கைத்தொழில் வளர்ச்சி யென்றும் ஆரவாரங்கள் செய்து செய்து, முன்னேற்றமடைய முயல்கின்ற பதவி அதனினும் அதிகமும் வேறுயதில்லையே. "அற்றன்று, அற்றன்று! அவர் பொய்ந்நெறி பற்றியவர், யாமோ சத்தியத்தை முன்வைத்து எல்லாம் சாதிக்கப் போகின்றோம்" என்று நம்மிற் சிலர் ஏமாந்து கூறுவார். எய்த வேண்டுவது அதிகாரமும் ஆட்சியும் பொருள்வளங்களுமே ஆயின் மேனுட்டுக் காடுகளே அடருமேயன்றிக் கற்பகச் சோலைகள் விளைவதெங்ஙனம். சத்தியம் நம்மைப் பன்றிமந்தைகள் ஆகவொட்டாமல் காக்கும்; உண்மையே. ஆனுல், "சத்தியம்" என்ற சொல் மட்டுமே அவ்வண்ணம் காத்திடாது. அச்சொல்லில் யாதும் இந்திரசாலமில்லை. அமரிக்க நாகரிகத்திலும் சத்தியத்தைப் பின்தொடர்பவர் இலராகார். ஆனுல், கேட்கின்றார் ஷாமல்ஹௌஸேன்:—

3L
M211, N28KN
M31'4'12

*“மனிதர் சத்தியத்தைப் பின்பற்றுகின்றனர்—ஆம்! அவர் பெரும்நோக்கம் யாது? ஞானத்தை விரும்பினவர்களா அவர்? இவர் சத்தியத்தைப் பின்தொடரும் முறையில் மெய்யுணர்வு வாய்க்கின்றதோ? பற்றற நம்மை விடுவிக்கிற பெருமையாலோ சத்தியத்தைச் சிறிதும் லோபமின்றி இத்துணைப் புகழ்கின்றனர்.—இருக்கலாம். எனினும், போட்டியிட்டுப் பற்பல சூழ்ச்சிகள் புரிகின்ற மனிதர் தங்கள் மானமற்ற அற்ப எண்ணங்களை தக்கதென பொய்ந்நியாயங்கள் காட்டுதற்குச் சத்தியமென்பதைத் தந்திரமாய் உதவியாக்கிக்கொள்ளும் புன்மையே ஐயமற வெட்டவெளியா யிருக்கின்றது. அதிகாரத்திற்கும் இலாபத்திற்கும் அந்தஸ்திற்கும் புரிகின்ற போராட்டத்தில் கையாளும் ஒரு படைக்கலமே இச்சத்தியம். மாயமாயிருக்கும் சத்தியத்தை மனிதர் தொழுகின்றார். மயக்கறத் தெளிந்த சத்தியமோ வெறுக்கப்படுகின்றது. வாழ்க்கையனைத்தும் வெளிப்படையான ஓர் பொய்யாயிருக்க மனிதர் சத்தியத்தை விரும்பினவர்போல் நடிக்கத்தான் ஏன் வேண்டும், என வினவலாம். இதற்கு விடை எளிது. பாசாங்குக்காரர்களிடையே தங்கள் பதவி உயர்வதற்கு உதவியாயிருப்பதால் சத்தியத்தை விரும்பினார்போல் பாசாங்குசெய்கின்றார் மாந்தர்—சத்தியத்தை விரும்புவார் ஒருவருமில்லை. தற்பெருமைக்கும் தன்னினைவு நிறைதற்கும் கருவியாய்ச் சத்தியம் என்னும் பொய்ப்பெயரை வாயாரக் கற்றவர்க்கு அது காலவளவில் அளிக்கின்ற அதிகாரம் அந்தஸ்து பெருமை அனையவைகளையே நாம் விரும்புகின்றோம்... ......தங்களுடைய தாழ்மையை மறைத்துத்தீர்க்கக் கீழ்மக்கள் கையாளும் ஓர் படைக்கலமாகவே ‘சத்தியம்’ என்னும் இது முடிகின்றது.*

அந்த நாகரிகத்திற்கு ஆட்பட்ட ஒருவர் இந்தப்படி உரைப்பது விந்தையன்றென்பதுடன், இவ்வுரை மாறுடச் செய்கைகளை நுண்ணிதின் ஆராய்ந்து தருகின்றதென்பதற்கும் ஐயமில்லை. தன்னாட்டம் குறிவைத்த முன்னேற்றக் காரியங்களில் சத்தியத்திற்கு இதனினும் உயர்ந்த பதவி கிடைத்தலரிது.

ஷாமல்ஹௌஸென் நாகரிகமென்னும் இந்நோயைச் சொன்னார், அந்நோயின் குணங்களையுஞ் சொன்னார். அந்நோய்க்கு மருந்தொன்று தெரிந்தவர்போல் பேசும்போதுதான் அவரை வளர்த்துவருகின்ற நாகரிகத்தின் புன்மை பின்னும் ஆயிரமடங்கு அதிகமாகத் தென்படுகின்றது. கடவுளிற்கும் அருளிற்கும் அவர் வாழ்க்கையில் இடந் தந்திலர். கடவுளென்பதெல்லாம் வீண் மாயவார்த்தைகளென்று விலக்கிவிட்டு, எல்லாருமெங்கும் இன்புற்றிருப்பதற்கு வேறோர் வழி சொல்கின்றார். மனிதரென்பவரனைவர்க்கும் காமமல்லது பிறிதொரு கருத்தில்லையாம். இருப்பதற்கு மியலாதாம். இருப்பதாய் உரைப்பதெல்லாம் பொய்யாம். எல்லாரும் எப்பொழுதும் இணைவிழைச்சு ஒன்றைப்பற்றியேதான் எண்ணிக்கொண்டிருக்கின்றாராம். எண்ணுந்தோறும் இக் காமவேட்கையை நிறைவேற்றிக்கொள்ள இயலாவண்ணம், நாணம் கற்பு பயிர்ப்பு முதலியவை நின்று தடுப்பது பெருங் கொடுமையாம். இந்தத் தடைகளால் காமங் கைகூடாமற் போகப்போக மனிதர் ஏங்கி ஏங்கி வளர்ச்சியற்றுப் போகின்றார்களாம். கன்னிமை கற்பு அனைய காவல்களுக்கடங்கி நிற்பதே மாதர்களுக் கழகென மதிக்கப்படுவதால், காமம் பெரிதுடையரேனும் சில மாதர் மானத்திற் கஞ்சிநிற்கக் காமுகர்—இவர் கருத்தின்படி எல்லா மாந்தர்களும் காமுகர்களே—வேசையர்களை நாடிச் செல்ல நேர்கின்றதாம். ஆதலின் எல்லா மாதர்களும் எய்துதற் கெளியவர்களாய்விடுவார்களாயின் பின் ஆடவர் விலைமாதர்களைத் தேடிச் செல்லவேண்டியதில்லையாம். யாரும் தன்னுடைய காமத்தை அடக்கப்படாதாம்; ஒளிக்கப்படாதாம்.........இப்படியே பொழிகின்றார் நம் அமெரிக்க அறிவாளர்............அப்பொழுதுதான் எல்லாம் செவ்விதாகுமாம். பரத்தையர் பழக்கம் அப்புறம் இவ்வுலகில் இல்லாமற் போய்விடுமாம்—வீட்டுப் பெண்களெல்லாம் வேசையராகிவிட்டால் பிறகு விலைமகளுக்குப் பிழைப்பேது—அவளுக்கு இங்கென் வேலை—என்பதே இவரது வாதத்தின் பிண்டப்பொருள்.

திருவருளை நினையாதார் தீமை இது. இவரைப் போல்பவர்களையே கடவுளருளைக் கருதாது வாழ்கின்ற நாகரிகம் பெற்றெடுக்கும். தன் தாயைக் கொல்லலாம் இவர்; ஆனல் இவர்வயின் பிறப்பது இன்னுங் கொடியதாயிருக்கக் காண்கின்றோம்.

நிரந்தர உண்மையொன்று யாம் எம்மாலியன்ற வன்மையொடு நிச்சயமாய்ச் சொல்லுவோம்—“கடவுளின் அருளொன்றே வேண்டற்பாலது; மற்றெதுவும் இருப்பின் இருக்க, இல்லா தொழியின் ஒழிக’ என்னும் பான்மைபோக்கி, அரசியல் பொருள்வளம் சீர்திருத்தம் முதலியவைகளில் மனத்தைச் செலுத்திவைக்கின்றவரையில் சனங்கள் வாழ்வாங்கு வாழ்வார் என்பது ஒருபோதும் இல்லை. இவைகளில் கவனஞ் செலுத்திய தேசத்தவர்—இங்கிருக்கும் சில பேதைமாக்கள் ஊனக்கண்களுக்கு, பத்திரிகை முதல் பரத்தையர்களீறாக எல்லாவகைகளிலும் முன்னேற்றம் அடைந்து விட்டவர்போல் தோன்றினாலும்—கெட்டழிந்த கதியினைப்பற்றி, கார்லைல் எமர்ஸன் ஆர்னல்ட் ரஸ்கின் டென்னிஸன் விட்மான் அனையவர் ஒருவாயாய்ச்சொல்லக் கேட்கலாமே. ஏன்! ஷாமல் ஹௌஸேனையுங் கேட்கலாம். மற்றவர் அவ்வாழ்க்கையால் சுடப்படாதவர். தாடகை வனத்தில் சூரியன் சொரிந்தவெப்பம் மீண்டுமச் சூரியனையே சுட்டதென்னல்போல், இந்த ஷாமல் ஹௌஸேன்மாத்திரம் தன்னைக் கெடுத்த அந்நாகரீகத்தைத் தான் மீண்டும் பன்மடங்கு அதிகமாய்க் கெடுக்கப் பார்க்கின்றார்.

**இவ்வாண்டில் புதிய சந்தாநண்பர்களாய்ச் சேர்ந்திருப்பவர்க்கு 1930-வது ஆண்டு இதழ்கள் வேண்டுமாயின் உடனே வரைதல் நலம். ஆப்லெதர் பைண்ட செய்து தபால் செலவு உள்பட விலை ரூ. 10. வரைந்து பணத்தையும் அனுப்பிவைக்கவும்.**

மானேஜர்



# பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[ 206-வது பக்கத் தொடர்ச்சி ]

## மூன்றும் களம்

இடம் :— கோவிலுக்கும் கூடாரங்களுக்கும் இடையிலுள்ள ஓர் மரமடர்ந்த இடம்.

[ரோலாவும் அலான்ஸோவும் வருகின்றார்கள்.]

ரோலா:—இவ்விடத்தில்தான்...என் நண்ப, நாம் பிரியவேண்டும். மிகவிரைவில் நாம் சேர்வோம் என்று நம்புகின்றேன்.

அலான்ஸோ:—அல்லது மறுபடி முகங்காணமற் போகின்றோமோ, யாதோ!... ரோலா! சற்று நில்; சற்று! ஒருவார்த்தை, இறுதி வேண்டுகோள் ஒன்று-

ரோலா:—இன்றையதினம் நம் பாஷையில்‘யுத்தம்’ என்பதைத் தவிர வேறு வார்த்தை இல்லையே.

அலான்ஸோ:—ஆம், ஆயினும் ஒரு வார்த்தை — ஒன்று—கோரா !

ரோலா:—கோரா !—சொல்! சொல் !!

அலான்ஸோ:—அடுத்த நிமிடம் நமக்கு—

ரோலா:—சாவோ, ஜயமோ !

அலான்ஸோ:—நம்மிருவரில், ஒருவருக்குச் சாவும், மற்றவருக்கு ஜயமாயு மிருக்கலாமே!

ரோலா:—அல்லது இருவரும் இறக்கலாம்.

அலான்ஸோ:—அப்படியாயின், என் மனைவியையும் மைந்தனையும் நமதரசனும் கடவுளுந்தான் காப்பாற்ற வேண்டும்—ஆனல்—நான்மாத்திரம் விழுவேனுனல், ரோலா, நீதான் எனக்கு ‘வார்ஸாக’ இருக்க வேண்டும்.

ரோலா:—எப்படி ?

அலான்ஸோ:—கோரா உனக்கு மனைவியாகட்டும்! எனது மைந்தனுக்கு நீயே தந்தையா யிரு.

ரோலா:—விழித்துக்கொள் அலான்ஸோ! இத்தகைய கோழைஎண்ணங்களை உதறிவிடு உடனே.

அலான்ஸோ:—ரோலா, எவ்வளவோ முயன்றேன். இவ்வித எண்ணம் என் மனத்தைவிட்டு நீங்கவோ மாட்டேனென்கின்றது. ஆனல் யுத்தத்தில் இவ்விதச் சஞ்சலங்களெல்லாம் என்னை யசைக்கா வென்பதுனக்குக் தெரியுமே: நான் வேண்டும்வண்ணம் புரிவாயென்று நண்ப, வாக்குறுதி யளித்திடு.

ரோலா:—கோராவிற்குச் சம்மதமானல்—ஆம்—வாக்களிக்கின்றேன். [கையறைகின்றான்]

அலான்ஸோ:-இதுவே எனது கடைசிக் கோரிக்கை என்று அவளிடம் சொல்! என் மகவிற்கும் எனது கடைசி யாசீர்வாதத்தைச் சொல்.

ரோலா:—சொல்வேன்—இப்பொழுது நாம் நமது இடங்களுக்குச் செல்வோம். இனி நமது வாட்களே பேசட்டும்.

[கத்தியை உருவிக்கொள்கின்றார்கள்]

அலான்ஸோ:—அரசனுக்காகவும் கோராவிற்காகவும்!

ரோலா:—கோராவிற்காகவும் அரசனுக்காகவும் -
[போகின்றார்கள்]

## நான்காம் களம்

இடம் :—பெருவியர் கூடாரம்.

[ஒரு கண்தெரியாத கிழவனும் அவன் பேரப் பையனும் வருகின்றார்கள்]

கிழவன்:—ஒருவரும் இன்னும் கூடாரத்திற்குத் திரும்பவில்லையா ?

பையன்:—ஒரு தூதன்மாத்திரம் வந்தான். கோவிலினின்றே யுத்தத்திற்கு நேராகப் புறப்பட்டுவிட்டார்களாம்.

கிழவன்:—கேள் ! போரின் பேரொலி கேட்கின்றதிப்போ. ஐயோ, இக் கண்கள்மாத்திரம் அவியாமலிருந்தால் இப்பொழுதுகூட யான் கத்தி எடுத்துச் சென்று வீரசுவர்க்கம் சேரும்வழியைத் தேடிக்கொள்வேனே ! வேறு ஒருவரும் இல்லையே இங்கே, பையா?

பையன்:—இல்லை ! அப்பா சாக்கிரதையா யிருப்பாரோ !

கிழவன்:—தன் கடமையைச் செய்துவிடுவான் அவன். உன்னைப்பற்றித்தான் எனக்கு அதிக கவலை குழந்தாய்.

பையன்:—உமதருகேயே இருக்கின்றேன், தாதா.

கிழவன்:—சத்துருக்கள் இங்கே வருவார்களானல், பையா, உன்னை இழுத்துக்கொண்டு போய்விடுவார்களே.

பையன்:—அப்படிச் செய்யவே மாட்டார்கள். போங்கள், தாதா. உங்களுக்கோ வயதாகிவிட்டது, கண்ணும் தெரியாது. அப்படியிருக்க என்னை இழுத்துக்கொண்டு போய்விட்டால் நீங்கள் தடுமாறித் திகைத்திடுவீர்கள் என்று ஒருநொடியில் தெரிந்து கொள்ள மாட்டார்களா! ஹ! ஹ!

கிழவன்:—ஐயோ பாவம்! அந்த ராக்ஷஸர்களின் இதயம் எவ்வளவு குரூரமானதென்பது உனக் கெப்படித் தெரியும். (பீரங்கிச்சப்தம் கேட்கின்றது) இதோ, சப்தம் வெகு சமீபத்தில் கேட்கின்றது. கொலைபுரியக் கொண்டிருக்கும் இக்கொடியோரின் அக்கினியெந்திரங்களின் பேரொலியைக் கேட்டாயா, பையா. (தூரத்தில் இரைச்சல் கேட்கின்றது) இப்போரின் பேரொலி கேட்குந்தோறும் கத்தியொன்று இருக்கும் நினைவோடு என்னையறியாமலே கையை இறுகப் பிடிக்கின்றேன்! ஐயோ! என் தேசத்திற்காக நானிப்பொழுது ஜபந்தானே செய்யலாம். எல்லாம் வல்ல

கடவுளே * 'இன்கா' வையும் அவன் வீரர்களேயும், காப்பாற்றி யருள்வாயாக.

பையன்:—ஓ! தாதா! சில படைஞர் ஓடுகின்றனர் களே—

கிழவன்:—ஸ்பானியரா, பையா?

பையன்:—இல்லே, பெருவியர்!

கிழவன்:—என்ன! பெருவியர் புறங்காட்டி யோடுவதா!—ஒருபோது மிராது.

[பெருவிய வீரர் இருவர் வருகின்றனர்.]

ஓ இவர்களே வினவு, பையா?—எங்கிருந்து வருகின்றனர்கள்? யுத்தம் எவ்வளவில் இருக்கின்றது?

போர்வீரன்:—நிற்க நேரமில்லே; குன்றிற்குப் பின்னே நிறுத்திவைத்திருக்கும் சைனியத்தையும் அழைத்துவர அனுப்பியிருக்கின்றனர். இன்று நமக்கு நல்ல காலமில்லே.

[போகின்றனர்கள்.]

கிழவன்:—போங்கள், ஆயின், விரைவினிற் போங்கள்.

பையன்:—ஈட்டிமுனேக ளனேகம் வெய்யிலில் பிரகாசிக்கின்றன இப்பொழுது.

கிழவன்:—அது நம் சைனியம்தான். இவ்வழி வருகின்றனர்களோ?

[ஒரு பெருவியவீரன் வருகின்றன்.]

பையன்:—எம் வீரனே, எனது குருட்டுத் தாதா சொல்வதைக் கேள்.

சிபாய்:—இவ் வயோதிகரை மலேயுட்போய் ஒளிந்துகொள்ளச் சொல்லத்தான் வந்தேன்; எல்லாம் போய்விட்டது. அரசனும் காயமுண்டார்

கிழவன்:—விரைவில், பையா! குன்றிற்கு அழைத்துச் செல். அங்கிருந்து நீ சண்டையை நன்றாய்ப் பார்க்கலாம்.

[காயப்பட்ட அத்தாலிபா, ஒரேஞே படைத்தலேவர் முதலானவர்களுடன் வருகின்றன்.]

அத்தாலிபா:—காயத்தைக் கட்டியாய்விட்டது. தீய காயமுமன்றிது. நான் யுத்தத்திற்கு மீளலாமே.

ஒரேஞே:—அடியேனே மன்னிக்கவேண்டும்;எங்களரசனது இரத்தம் ஒருதரம் சிந்திவிட்டால், பிறகு அவர் யுத்தகளத்தினின் றகலும் வரையில் நமக்கு வெற்றி எய்தாதென்று நம் தூய கொடியைத் தாங்கி நிற்கும் தலேமைக்குரு சொல்லியிருக்கின்றனர்.

அத்தாலிபா:—இதுவென்ன கஷ்டமிது! எனது ஒப்பற்ற வீரர்களின் பராக்கிரமச் செய்கைகளே நான் காணவும் கொடுத்துவைக்கவில்லே போலும்; இருக்கட்டும், நீங்கள் போய் உங்களுங்கள் வேலேயைப் பாருங்கள். எனக்காக இங்கொருவரும் இருக்க வேண்டியதில்லே. விழுந்த உங்கள் தோழர்களின் இரத்தப்பழியைத் தீருங்கள்.

[ஒரேஞே, படைத்தலேவர், போராட்கள் போகின்றனர்கள்]

நான் வருத்தத்தால் உருகிப்போய்விட மாட்டேன். என் கதியைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலேஇல்லே. என் பிரஜைகளே, உங்களுக்காகத்தான் நான் படும் பாடெல்லாம்.

கிழவன்:—(முன்னுக்கு வந்து) அதிர்ஷ்டஹீனனெருவன் பேசவில்லேயா இங்கே!—இவ்விதம் முறையிடுகின்றவர் யாரோ?

அத்தாலிபா:—நம்பிக்கையை முற்றிலும் கைவிட்ட ஒருவன்.

கிழவன்:—நம்மரசர் உயிருடனிருக்கின்றனரா ?

அத்தாலிபா:—அரசன் இன்னமும் உயிர்வைத்திருக்கின்றன்.

கிழவன்:—ஆயின் நீ சிறிதேனுங் கைவிடப்பட்டவனகாய். அத்தாலிபா மகாராஜன் தன் குடிகளுள் மிக்க அற்பனேயுங்கூடக் காப்பாற்றுகின்றனர்.

அத்தாலிபா:—ஆம், அத்தாலிபாவைக் காப்பாற்றுவது யாரோ ?

கிழவன்:—நியாயத்தை நிலேநிறுத்தி நீங்காதெங்கும் பரந்த பொருளாமவ் வருட்பெருங் கடவுள். நமது இராஜோத்தமனது தர்மசிந்தை,குடிகளின் அன்பையும் கடவுளின் அருளேயும் ஒருங்கே பெறுகின்றதன்றே !

அத்தாலிபா:—(ஒருபுறமாய்) நான் என் விதியை நொந்திருப்பேனுல் கடையாயவொரு தெய்வதுரோகியாய் முடிந்திருப்பேனே! ஈசா, எல்லாம்வல்ல உனது செய்கைகள்தான் எவ்வளவு வியக்கத்தக்கன ! நரக வேதனே இதனிலும் கொடியதன்றென்று எண்ணியிருக்கும் இந்த வேளேயிலே, அமுதனேய இவ்வின்பம் எனக் களித்தனே.—குடிகள் என்னே நேசிக்கின்றனர் என்னும் நம்பிக்கையை மெய்ப்படுத்தினுயே.

பையன்:—(முன்னுக்கு வந்து) ஓ, தாதா ! ஓ, ஐயா ! வெறிகொண்டு நம்மீது பாய்ந்துவரும் அவ்விகார உருவங்களேப் பார் அதோ !

அத்தாலிபா:—ஹ ! ஸ்பானியர்கள் ! நான், ஹம், அத்தாலிபா—துர் அதிர்ஷ்ட தேசப்பிரஷ்டன்!அரசனுயிர் ஒன்றைக் காத்துப்பார்க்கக் கையிற் கத்திகூட இல்லேயே !

[தவில்லா, அல்மாக்ரோ, ஸ்பானிய போர்ச்சேவகர்கள் வருகின்றனர்கள்.]

தவில்லா:—அவன்தான் — நமதெண்ணம் நிறைவேறிவிட்டது—அவனே எனக்கு நன்றாய்த் தெரியும்—அரசன்தான் அவன்.

அல்மாக்ரோ:—போவோம்; கவர்ந்தவிக் கொள்ளேப் பொருளுடன் விரைந்து செல்லுங்கள். இப் பெருவியர் ஓடுகின்றவர்களானுலும் அவர்களருகில் நெருங்க வேண்டாம். இவ்வழி, இவ்வழி செல்வோம்.

[வந்தவர்கள் அத்தாலிபாவைச் சிறை பிடித்துச் செல்கின்றனர்கள்.]

கிழவன்:—நமதரசனு அது! அவரது திருவுருவத்தைப் பார்க்கும் பாக்கியம் பண்ணவில்லேயே இப்பாழுங் கிழவன். பையா, அம் மூர்க்கர்கள் என் கைக்கெட்டுந் தூரத்தில் என்னே அழைத்துமாத்திரம் சென்றிருப்பாயானுல்—

பையன்:-தாதா ! நமது போராட்கள் இங்கே ஒளிந்துகொள்ள ஓடிவருகின்றனர்.

கிழவன்:—அப்படிக் கிராது—அரசனேக்காப்பாற்ற இருக்கும் — நமதரசனே ஒருபோதும் கைவிடார்.

(உள்ளே ஆரவாரம்)

[பெருவிய படைத்தலேவர்களும் போர்ச்சேவகர்களும் ஓடிவருகின்றனர்கள். பின் ஒரேஞே வருகின்றன்.]

ஒரேஞே:—நில்லுங்கள் ! நிற்கத்தான் வேண்டும் ! ரோலா கூப்பிடுகின்றனர் உங்களே.

*'இன்கா' என்பது அத்தாலிபாவின் குலப்பெயர்.



படைத் தலேவர்:—அவர்களது கொடிய போர் யந்திரங்களுக்குமுன்னே எங்களால் நிற்கமுடியாது.

[ரோலா வருகின்றன்]

ரோலா:—நில்லுங்கள் ! நீசர்களே! கோழைகளே என்ன ! உயிரழிவதற்குப் பயந்து மான மழிவதற்குப் பயப்படவில்லேயா நீங்கள் ? நான் கொண்டிருக்கும் இக் கோபத்தின்மேல் ஆணேயாய், இங்கிருந்து ஒரு அடி நகருபவனே இருதுண்டாய்க் கிழித்தெறிவேன்! இல்லேயாயின் இப்பரிபவத்தைக் கண்ணுறுவண்ணம் உங்கள் தலேவனுகிய என் மார்பில் அவ் வாண்மையற்ற கத்தியால் குத்திவிடுங்கள். எங்கே நமதரசன் ?

ஒரேஞே:—இக் கிழவரும் பையனும் சொல்வதிலிருந்து, நம் அரசனேச் சிறைப்படுத்திச் சென்றிருக்கின்றனர்போல் தோன்றுகின்றது. அதோ பாருங்கள். இன்னும் அப் பாதகர்கள் மறையவில்லே.

ரோலா:—ஆயின் 'இன்கா' வையும் சிறைப்படுத்திச் சென்றனரோ! கேளுங்கள் கேடுகெட்ட இராஜபக்தியற்ற கும்பலே! அதோ பாருங்கள்! உங்க ளரையன், உங்கள் தந்தை, அத்தாலிபா மகாராஜனுக்கு விலங்கிட்டு அக்கொடியோர் இழுத்துச் செல்வதால் பரந்தெழுந் தூளியைப் பாருங்கள்! இப்பொழுது கூடுமானுல் பறந்துசென்று உங்கள் இழிவான உயிரையே காப்பாற்றிக்கொள்ளும் வழியைத் தேடுங்கள்.

கிழவன்:—ரோலாவின் குரலன்றே விது—என் கண்களேக் குத்திய வித்த அப் புண்ணியபுருடன் நீடூழி வாழ்க. இல்லாவிடில் ரோலாவின் பின்செல்லத் துணியாமல் நடுநடுங்கி விழித்து நிற்கும் இவ் வெட்கங்கெட்ட கழுதைகளே எவ்விதம் கண்டு சகிப்பேன்—அதுவும் நம்மரசனே மீட்பதற்கு—கண்களே! நீங்கள் செய்த பாக்கியமே பாக்கியம்.

ரோலா:—பகைவரது பீரங்கிக்குப் பின்னிட்டு, இவ்வயோதிகன் வசையையும் சுமக்கின்றீர்களோ? விழியற்ற இம்முதியோன்தன் வீரவுடலிற் பொங்கி வீணே ஓடும் தீர இரத்தத்தின் ஒருதுளி உங்கள் உதிரத்திற் கலந்திருக்கலாகாதா! தெய்வமே! என்னே இத் தருணத்திற் கைவிட்டுச் செல்வீர்களானுல் படுநாசமாய்ப் போகக்கடவீர் ! — போங்கள் — போய்த்தான் விடுங்கள்--நானே செல்கின்றேன்—தனியாக—எனது சக்கரவர்த்தி சிரேஷ்டனுடன் கீர்த்தியோடு மாய்த்துக்கொள்கின்றேன் எனதுயிரை!

போராட்கள்:—பிரபு! நாங்களும் வருகின்றேம்.

[எக்காளம் ஊதி ரோலாவிற்குப் பின்னே பாய்ந்து ஓடுகின்றனர்கள்]

கிழவன்:—ஓ ரோலா! நீ யோர் தெய்வமே—சூரியபகவானே, ரோலாவிற் குதவியாக மின்ன லிடிகளேச் சற்றே கொடுத்துவை. ஏதேனும் ஒரு உயரத்திலேறி, பையா, கவன்று வாடும் எனக்கு என்ன நடக்கின்றதென்று சொல்.

பையன்:—இதோ இப் பாறையின்மேலேறி அந்த மரத்தைப்பற்றிக்கொள்வேன்(அப்படியேசெய்கின்றன்) ஆ—இப்பொழுது தெரிகின்றது—இப்பொழுது—ஆமாம்—ஸ்பானியர் அதோ திரும்பி ஓடுகின்றனர்.

கிழவன்:-ரோலா பின்தொடரவில்லேயா அவர்களே?

பையன்:—ஆம் ஆம்—அம்புபோற் பாய்கின்றனர். இதோ நம் போராட்களேக் கைகாட்டி யழைக்கின்றனர் பார் (பீரங்கி வெடிக்கின்றது) இதோ! [illegible] புகையும். இதோ!

கிழவன்:—ஆம், இப்பிசாசுகளின் ஆயுதம் நெருப்புத் தானே!

பையன்:-புகையைக் காற்றடித்துக்கொண்டுபோய் விட்டது. அதோ கைகலந்து விட்டனர்.

கிழவன்:—அரசர் தெரிகின்றனரா கண்ணுக்கு ?

பையன்:—இதோ! ரோலாவும் அவரருகிலேதானிருக்கின்றனர். பொரிபறக்க இருபுறமும் அடிக்கின்றனர் பார் !

கிழவன்:—நீடூழி வாழ்க ரோலா ! அவ்வரக்கர்களே விடாதே !

பையன்:—தாதா ! தாதா ! ஸ்பானியர் பறந்தோடுகின்றனர்! ஓஹோஹோ!—அரசன் ரோலாவைக் கட்டிக் கொள்கின்றனர்; இதோ பார் !

[சிறுவன் சந்தோஷத்தால் குதிக்கின்றன். உள்ளே எக்காளமும் பேரிரைச்சலும்]

கிழவன்:—(முழங்காற்படியிட்டு) பிராணமூலமாகிய தெய்வமே! என் வாழ்நாட்களுள் இந்தநிமிடம் ஒன்று எனக்கு அளித்ததற்காக, குரல்நடுங்கும் இத்தொண்டையால் உன்னே எவ்வாறு வாயார வாழ்த்தித் துதிக்க வல்லேன் !—பையா, கீழே வா,—உனக்கொரு முத்தம். நிற்கக்கூடச் சக்தியில்லே எனக்கு.

பையன்:—(அவனருகில் ஓடிவந்து) என்னேப் பிடித்துக் கொள்ளேன் ! தாதா! ஏன் இப்படி நடுங்குகின்றது உன் உடம்பு—

கிழவன்:—இதுதான் ஆனந்த பரவசம் பையா !

[கிழவனுக்குப் பையன் கோல்கொடுத்து அழைத்துச் செல்கின்றன்]

[அத்தாலிபா, ரோலாமுதலான போர்த் தலேவர்களுடன் வருகின்றன்]

அத்தாலிபா:—இந்தேசத்து ஜனங்களுக்காக, அவர்களரசனே இன்று நீ காத்ததற்கோர் ஞாபகார்த்தமாக நீ இவ் வைரமாலேயை அங்கீகரிக்கவேண்டும் ரோலா.

[தன் கழுத்தில் அணிந்திருக்கும் வைரமாலேயைக் கழற்றி ரோலாவிற்குக் கொடுக்கின்றன்]

அதன்மேல் விழும் இக்கண்ணீர், மணியின் காந்தியைச் சற்றுக் குறைக்குமெனினும் இக் கொடையின் மேன்மையைச் சிறிதும் கெடுக்காது.

ரோலா:—இறைவனது திருக்கைகளன்றி எனதன்று எங்களரையன் உயிரை இன்று காப்பாற்றினது.

[பெருவிய போர்த்தலேவர்களும் படைஞர்களும் வருகின்றனர்கள்]

ரோலா:—என்ன, சேவகா, அலான்ஸோவினிடமிருந்தா ?

சேவகன்:—எங்கள் சைனியம் பயத்தாற் சற்று கலங்கியதேனும் அலான்ஸோவின் ஆற்றலால் எல்லாம் மிக விரைவில் நேராய்விட்டது. ஆயினும் அலான்ஸோவை நாம் இழந்ததற்காகத் துயர்கூர வேண்டியவர்களா யிருக்கின்றேம்: அவரது ஆவலானது அவரைச் சத்துருக்கள்நடுவில் வெகுதூரம் இழுத்துக்கொண்டுபோய்விட்டது.

அத்தாலிபா:—என்ன ! அலான்ஸோ கொலேயுண்டானே ?

[illegible]:—அவர் கீழே விழுவதைப் பார்த்

188910

இரண்டாம் சேவகன்:—இதைக் கேளுங்கள். அவர் மறுபடி எழுந்து போர்புரிவதை நான் பார்த்தேன்—எனினும் பிறகு, அவரைச் சூழ்ந்து நிராயுதனாக்கி விட்டார்கள்.

அத்தாலிபா:—ஓ! ஜயமே! இவ்வளவு அதிக விலையா வுனக்கு!

ரோலா:—ஓ! கோரா! உனக்கு யார்சொல்வர் இதனை!

அத்தாலிபா:—ரோலா, நமது நண்பனை இழந்தோம்—நமது சுயதேசம் காக்கப்பட்ட தின்றைக்கு! நம் மனத்திலிருக்கும் வியாகுலம், பொதுஜன ஜய குதூகலத்திற்கு இன்றையதினம் இடம்கொடுக்கவேண்டியதுதான். இப்பொழுது, உயிரைப் பதராகவும் மதியாது போர்முகத்தினின்று வீரசுவர்க்கம் சேர்ந்த தேசாபிமானிகளின் விதவைகளையும் பாலர்களையும் நாம் போய்த் தேற்றுவோம். இதுவே வெற்றிபெற்றோர் நிறைவேற்றவேண்டிய கடமைகளுள் முதன்மையானது.

(எல்லோரும் போகின்றார்கள்.)

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

## 24. யோகம்

[213-வது பக்கத் தொடர்ச்சி]

### 1. இது மனஸ்தம்பனக்கலை யென்னலு மாம்.

இதுகாறும் ஸ்தம்பனக்கலைகள் பல கண்டோம். அவை செய்கைக்கு இனியவென்றும், அவைகளைப் பயில்வதால் இம்மையிற் பெறும்பேறு பலவுளவென்றும், அவற்றை விரும்பி ஏற்காவிடினும், இக்கலைகளின் நுட்பங்களைத் திருநாவுக்கரசுநாயனார் அறியாதவ ரல்லர் என்றுங் காட்டினோம்.

யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்

என மணிவாசகப்பெருமான் கூறியவாறு இரத்தினக்கற்களை கூழாங்கற்கள்போல் உழைவாரத்தால் விட்டெறிந்து கோயிலில் திருப்பணிசெய்த வாகீசமூர்த்தி மேற்கண்ட அற்ப இன்பமே இம்மையிற்றருங் கலைகளை மதித்தவரல்லர். ஆயினும் ஸ்தம்பனக் கலைகளைக் கருதுங்கால், மனஸ்தம்பனக் கலையெனும் நாமம் பெறத்தக்க யோகமார்க்கத்தை ஞானவழியில் விரும்பினாராதலால், அவர் யோகானுபவங்களைத் தேவாரப்பாசுரங்களில் ஆங்காங்கு நாம் கண்டு ஆநந்திக்கலாகும். அவ்வாறு நாம் செய்யப்புகுவதன் முன்னர் "யோகம்" என்பது யாது, அது எத்துணை வகைப்படும், என்னும் விஷயங்களைச் சற்று ஆராய்வோம்.

யோகமென்பதற்கு "நிலை" என்னும் தமிழ்மொழி பொருளாய்ப் பொருந்தும். உலகவழக்கத்தில் ஒருவனை நோக்கி, "இவன் யோகம், என்ன யோகம்!" என்று பலர் மொழியக் கேட்டிருக்கின்றோ மன்றோ? இங்கு யோகம் என்பது மேலான அந்தஸ்து எனினுமாம். ஒருவன் ஜாதகத்தை ஒரு சோதிடன் ஆராய்ந்து உரைக்கும்போது "இந்தத் திசை இராஜயோகம்" என்று கூறவும் நாம் கேட்டிருக்கின்றோம். இப்பொருளிலே தாயுமானவரும், ஒரு செய்யுளில்

"மும்மண்டலத் திட்டமுற்றவளா ராசயோக
மிவன் யோக மேன்றறிஞர் புகழவே
ஏழையேன் உலகில் நீடு வாழ்வான்"

என்கின்றார். எனவே, யோகமென்பது பெரிய அந்தஸ்து அல்லது நிலைமை யென்பது முதற்பொருள் போலும். ஆயினும், அறிவிற் சிறந்த மக்கள் அடையும் ஒருவகை மேலான நிலைக்கே இம்மொழியை இலக்கியங்களில் வழங்கலாயினர். அதை யோகநிலை யென்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகவும் வழங்கலானார். யோக மென்பது சலனமற்றுத் திரையிலாக் கடல்போல் பலகாலம் அசைவின்றி நிற்க வைக்கும் கலைக்கே இக்காலத்திற் சிறப்புப்பெயராய் வழங்குகின்றது.

காடுங் கரையும் மனக்குரங்கு
கால்விட் டோட அதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ?
வொன்றாய்ப் பலவா யுயிர்க்குயிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி
அருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவ மிதுகண்டீர்
சேர வாருஞ் சகத்தீரே. தாயுமானவர்.

அருளைப்பெற்று அன்புநிலையடைய ஏதுவாக இருப்பது மனநிலையேயாம். ஆதலால், அதனை நிலைப்படுத்துவதற்கும் வசப்படுத்துவதற்குமே, இடைவிடா எண்ணமாய் மேலார் முயல்வர்.

நீப்பரிய பல்பிறவி நீக்கும் வண்ண
நினைந்திருந்தேன் காணேஞ்சே நித்தமாகச்
சேப்பிரியா வெல்கொடியி னானே யென்றுஞ்
சிவலோக நெறிதந்த சிவனே யென்றும்
பூப்பிரியா நான்முகனும் புற்றின் மேலைப்
புண்டரீகக் கண்ணனும் போற்றி யென்னத்
தீப்பிழம்பாய் நின்றவனே செல்வம் மல்குந்
திருவாரூ ராவென்றே சிந்தி நெஞ்சே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 6.

இகழுமா றெங்ஙனே ஏழை நெஞ்சே!
யிகழாது பரந்தோன்றாய் நின்றான் றன்னை
நகழுமா வரைக்கீழிட் டரக்கர் கோனை
நலனழித்து நன்கருளிச் செய்தான் றன்னைத்
திகழுமால் மதகரியி னுரிபோர்த் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிகழுமா வல்லானை நீடூ ரானை
நீதனே னென்னேகா நினையா வாறே.
திருப்புன்கூர் - திருநீடூர் - திருத்தாண்டகம் 10.



செற்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து
சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தை யுள்ளால்
உற்றநோய் களைந்திவ் வுலக மெல்லாங்
காட்டுவா னுத்தமன்றா னோதா தெல்லாம்
கற்றதோர் நூலினன் களிறு செற்றான்
கழிப்பாலை மேய கபாலப் பனார்
மற்றதோர் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தா ரவ்வழியே போது நாமே.
திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகம் 9.

எனவே மனத்தின் செற்றம்நீங்கிச் சிந்தை சிவத்தியாத்தினிமித்தம் குவியுமாயின், அதுவே வைத்தியம் முதலியவைகளின் பயனைத்தந்து நோய் களையவும், சர்வ கலைகளும் கல்லாமலே கற்கத் திறம்பெறவும் ஒருவனுக்கு நேருமென்றோம். இஃதறிந்து யோக மார்க்கத்தைக் கடைப்பிடித்து, ஓடுங் குரங்குபோன்ற நம்மனதை ஒருநிலையிற் கட்டிவைத்து உய்யும் வழி நோக்கிச் செல்வதற்குப் பற்பல வகையனவான யோகாப்பியாசங்களை மேலோர் ஏற்படுத்தினர். யாராருக்கு எது பயன்படுமென்பது வரையறுத்துக் காட்டல் மிகவும் கடினமான தொழிலாகும். ஆயினும் நெஞ்சம் தம்முடைய வசமாகாதவரையில் வீட்டின் பேறு இல்லை யென்பது திண்ணம்:—

முன்னெஞ் சம்மின்றி மூர்க்கராய்ச் சாகின்றார்
தந்நெஞ் சந்தமக் குத்தா மிலாதவர்
வன்னெஞ் சம்மது நீங்குதல் வல்லீரே
யென்னெஞ் சிலீசனைக் கண்ட துள்ளமே?
உள்ளத் திருக்குறுந்தொகை. 6.

புலன்களை வென்று தீவினையைக் கொன்ற குணத்துடன் கடவுளை வணங்கி நன்றாய் மனம் ஒருங்க வைப்பதுவே ஞானரூபமாய் முடியுமென்பது அப்பர் கருத்து *. அத்தகைய மனத்தின்கண் பரம்பொருளே குருமூர்த்தியாய் நின்று கைவல்யநிலையைக் காட்டி அஞ்ஞான மயமாயிருந்த ஜீவனை ஞானமய மாக்குவாரென்பதும் அப்பர் தேவாரத்தால் அநுமானிக்கலாம்.

வென்றானைப்புல னைந்துமென் றீவினை
கொன்றானைக்குணத் தாலே வணங்கிடா
நன்றா னம்மனம் வைத்திடு ஞானமாம்
ஒன்றானைக்கண்டு கொண்டதென் னுள்ளமே.
மருவினை மட நெஞ்சம னம்புகுங்
குருவினைக்குணத் தாலே வணங்கிடுந்
திருவினைச்சிந்தை யுட்சிவ னாய்நின்ற
வுருவினைக்கண்டு கொண்டதெ னுள்ளமே.
உள்ளத் திருக்குறுந்தொகை. 7 & 8.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த மனஸ்தம்பன நிலைக்கு ஏதுவாய யோகம் எத்துணை வகைத்தென்பதும் அப்பிரிவுகளின் பேதங்கள் முக்கியமாய் யாவையென்பதும், மனத்திலுள்ள கள்ளத்தைக் கழித்து அதனை ஒருநிலையில் நிற்கவைக்கும் அப்பியாசங்களின் ஏற்றம் என்னை என்பதும் சற்றுக் கவனிப்போம்.

* பத்தர்கட் கருளும் வைத்தார்
பாய்விடை யேற வைத்தார்
சித்தத்தை யொன்ற வைத்தார்
சிவமதே நினைய வைத்தார்
முத்தியை முற்ற வைத்தார்
முறைமுறை நெறிகள் வைத்தார்
அத்தியி னுரிவை வைத்தா
ரையனை யாற னாரே.
திருவையாறு - திருநேரிசை 7.

### 2. யோகத்தின் வகைகளும் அவற்றின் ஏற்றமும்

யோகிகள் இருவகைப் படுவர். ஹடயோகிகள் எனப்படுவர் சிலர், இராஜயோகிகளெனப்படுவர் சிலர். இவர்கள் அநுஷ்டானங்கள் சில பொதுவாயினும் சிறப்பாயுள்ள பேதங்களைமாத்திரம் காண்போம். ஹடயோகமாவது யாவருக்கும் சித்தியாகக் கூடியதன்று. அது முற்றப் பெறினே அவ்வப்பியாசியை யோகி என்னலாமன்றி முற்றப்பெறாவிடில் யோகி யென்னும் நாமம் பெறப் பாத்திரனல்லன். இராஜயோகமோ அவ்வாறன்று. அதிலுள்ள எட்டு அந்தஸ்துக்களில் நான்கு அல்லது ஐந்து பெரும்பாலும் யாவருக்கும் பழக்கத்தால் சித்தியாகக் கூடியனவே. அவைகளுக்கு மேற்செல்லுதலே, புண்ணியவசத்தின் பயனும். பெரும்பாலும் முதல் ஐந்துபடி, ஏறியவர்கள் ஏனைய படிகளுக்கு மறுசென்மத்திலாகிலும் செல்லுவரென்பது ஆன்றோர் துணிவு.

ஹடயோகமானது பிடிவாதமான யோகம் என்று பொருள் கொள்ளலாகாது. ஆயினும் அதில் ஒருவகைப் பிடிவாதமும் உண்டு. அதை ஆன்றோர் வைராக்கிய மென்று வழங்குவர். எடுத்த கருத்து நிறைவேறும்பொருட்டு, மெய்வருத்தம் பிராணஹானி முதலிய எல்லாத் தீமைகளையும் ஒருபொருட்டாய் எண்ணாமல் கருமமேகண்ணாய்ப் பிராணன்போனாலும் அஷ்டாமா சித்தியை யடையாது விடேனெனும் துணிவு பெற்றோனே இக்கலையிற் செல்ல அதிகாரியாவன். ஏனையோர் பிரயத்தனத்திலே பங்கமடைந்து சுகங்கெட்டுத் தேக தத்துவங்களின் கட்டும் அலக்கழிந்து வாழ்நா ளிழப்பர். ஆயினும் குரு உபதேச வழி நின்று பழகுவோர்க்கு இதில் யாதொரு ஆபத்துமில்லை. ஏனெனில் ஹடயோகத்தில் பழகும் முறைகள் சில தர்க்கவொழுங்கில் காயசித்திக்கு இன்றியமையாதன வென்றும் காட்டக் கூடியனவாம்.

### 3. தேகதத்துவங்களின் விவரம்.

தேகதத்துவங்கள் முப்பத்தைந்து என்றும் அவை நிகழும் அவஸ்தைகள் ஐந்தென்றும் ஆன்றோர் வருத்ததைத் தாயுமானவர் இரண்டு செய்யுட்களில் மிகவும் அழகாய்ச் சுருக்கிச் சுட்டியிருக்கின்றனர். அவை சைவத்தில் வெளியான மானத சாஸ்திரத்திற்கும் உடற்கூற்று அமைப்பிற்கும் பொருந்துமாறு விளங்கும்:—

சாக்கிரமா நுதலினில் இந்திரியம் பத்தும்
சத்தாதி வசனாதி வாயுபத்தும்
நீக்கம் லந்தக்கரணம் புருடனோடு
நின்றது முப்பானைந்து நிலவும்; கண்டத்து
ஆக்கிய சொரப்பன மதனில் வாயு பத்தும்
அடுத்தன சத்தாதி வசனாதியாக
நோக்கு கரணம் புருடனுடனே கூட
நுவல்வரிரு பத்தைந்தாம் நுண்ணியோரே.
சுழுத்தியித யந்தன்னுள் பிராணன் சித்தம்
சொல்லரிய புருடனுடன் மூன்றதாகும்
வழுத்தியநா பியிற்றுரியம் பிராண னோடு
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கும்;
அழுத்திடுமூ லந்தன்னிற் றுரியா தீதம்
அதனிடையேபுருடனொன் றியமருஞானம்
பழுத்திடும்பக் குவாறிவா ரவத்தை யைந்துள்
பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசு தானே.

என இவ்வாறு முப்பத்தைந்து தத்துவங்களின் விவரமும், சாக்கிரதாவஸ்தையில் வழங்குவன இவை யாமென்றும், சொற்பனத்தில் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் நீங்கலாக எஞ்சிய இருபத்தைந்தும் வழங்குமென்றும், சுழுத்தியில் (மூடநித்திரையில்) பிராணனும் (சுவாசம்) சித்தமும் (Feeling) புருடனுடனுடன் வழங்கு மென்றும், ஞானிகளின் சிறப்பவஸ்தைகளான துரியம் துரியாதீதம் என்னும் நிலைகளில், சித்தமுமின்றி முறையே பிராணசம்பந்தத்துடனும், பிராணனை சுவாசமற்றும் இத் தத்துவங்கள் வழங்குமென்றுங் கூறுவார். ஆயினும் இத் தத்துவங்களான கருவிகள் நிற்கும் நிலை ஐந்தாம் அவஸ்தைக்குச் செல்லும் ஞானம் பழுத்திடும் பக்குவரே அறிவார் என்றும் தாயுமானவர் விளக்குகின்றார். இதையே அப்பரும்

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் றண்புக லூரனே.

திருப்புகலூர் - திருக்குறுந்தொகை 7.

எனச் சுட்டினர் போலும்.

மேற்கூறிய ஞானிகளின் சிறப்பவஸ்தைகளான துரியம் துரியாதீதமென்னும் நிலைகள் நீங்க மூன்றவஸ்தைகளே மக்கட்கும் ஏனைய உயிர்ப்பொருள்களுக்கும் பொதுவாயினவாம். இதன்றியும் மூர்ச்சை மரணமென்னும் இரண்டு அவஸ்தைகளைச் சேர்த்து அஞ்ஞானிகளின் அவைவஸ்தைகள் ஐந்து என்றும் மொழிவர். எனவே ஐந்தவஸ்தைகளை நிகழ்விக்கும் கருவிகள் முப்பத்தைந்து என்று கொள்ளுவது ஒரு வகைக் கணக்காம். மற்றொரு வகையில் தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்று கொள்வது முண்டு. அக்கணக்கின்படி திருநாவுக்கரசுநாயனாரும்,

பொக்கமாய் நின்ற பொல்லாப்
புழுமிடை முடைகொ ளாக்கை
தொக்குநின் றைவர் தொண்ணூற்
றறுவருந் துக்க மெய்த
மிக்குநின் றிவர்கள் செய்யும்
வேதனைக் கலந்து போனேன்
செக்கரே திகழு மேனித்
திருக்கொண்டீச் சரத்து ளானே.

திருக்கொண்டீச்சரம் - திருநேரிசை 5.

எண்பதும் பத்து மாறு
மென்னுளே யிருந்து மன்னிக்
கண்பழக் கொன்று மின்றிக்
கலக்கநா னலக்க ழிந்தேன்
செண்பகந் திகழும் புன்னை
செழுந்திரட் குரவம் வேங்கை
நண்புசெய் சோலை சூழ்ந்த
நனிபள்ளி யடிக ளாரே.

திருநனிபள்ளி - திருநேரிசை 3.

துருத்தியாங் குரம்பை தன்னிற்
றொண்ணூற்றறங் கறுவர் நின்று
விருத்திதான் தருக வென்று
வேதனை பலவுஞ் செய்ய
வருத்தியால் வல்ல வாறு
வந்துவந் தடைய நின்ற
அருத்தியார்க் கன்பர் போலு
மதிகைவீ ரட்ட னாரே.

திருவதிகை - திருநேரிசை 4

காகமோடு கழுகு, அலகை, நாய், நரி முதலிய இச்சிக்கும் சோற்றுத் துருத்தியான இவ்வுடல் சித்தி பெறுவதே உயிருக்கு முத்திபெறுவதற்கு அடிப்படையென்றும், இந்நோக்கு வயித்தியக் கலையிலும் முன்னேக்கே யென்றும் முன்னரே கண்டோம். காய சித்தி பெறுவதற்குச் சிறப்பான கலை யோகமே. அழியாப் பதவி பெறுமளவும் ஞானப்பொறி பெற்ற இவ்வுடலைக் கைசோர விடலாகாது. அதுவரையில் இது அழியாது நிற்கவும், உழைக்கவும், நல்வழியிற் செலுத்த உற்சாக முண்டாக்கவும், இந்தத் தேகமானது இலேசாகவும், சுதந்தரமாயும், நரை திரை மூப்பென்னும் வயோதிகத் துன்பங்கள் வாராமலுமிருக்கும்வண்ணம் இத் தேகதத்துவங்கள் நிலைகூடியவாறு கண்டுணர்வது அறிஞருக்கு இன்றியமையாக் கடமையாகும். கண்டுணர்ந்து அவற்றைத் திருப்பித் தன்வயமாக்குவோன் யோகாப்பியாசி எனப்படுவன்.

மேற்கூறிய முப்பத்தைந்து, அல்லது தொண்ணூற்றாறு தத்துவங்களில் இருவகைப் பகுதியுள. அவையாவன ஸ்தூலத்திற் கண்டறியத்தக்க கருவிகள், சூக்குமமாய்க் கண்டறியக்கூடிய கருவிகள் என்பனவாம். சூக்கும தத்துவங்கள் ஸ்தூல தத்துவ சம்பந்தத்தாற் பங்கப்படுமன்றி, நோய் முதலியன அவற்றை நேரே சாரா. ஆதலால் யோகக் கலையின் அப்பியாசிகள் கவனிப்பன ஸ்தூல தத்துவங்களான கருவிகளே. இவை முதலில் உண்டாகும் இயற்கையை அறிந்து அவற்றிற்கு ஊனம்நேருங்காலத்தில் சிகிச்சைகள் தக்கவாறு செய்ய சாஸ்திரம் ஏற்பட்டிருக்கின்றது. திருநாவுக்கரசு இவற்றைக் குறிப்பிடுவது காண்க:—

உன்னுருவிற் சுவை யொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
புலிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் றுலைப்படுப்பான் றருக்கேன் மின்னே!

துப்பினைமுன் பற்றறு விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே நீங்கள்
ஒப்பனையைப் பாவித்திவ் வுலகை மெல்லா
முழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யென்றன்
வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகன்
மணாளனை யெம்பெருமானை வானோர் தங்கள்
அப்பனைச்செப் பிடவடைவே னும்மா லுனு
மாட்டுணே னோட்டத்திங் கலையேன் மின்னே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 4&5



தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[211-வது பக்கத் தொடர்ச்சி]

3. குமார காலச் சருக்கம்.

101. இன்னணம் பலரு மேத்த
வினிதினங் கிருந்த வேந்தன்
பொன்னணி வாயில் காக்கும்
பூங்கழ லவனை நோக்கி
யென்னவ ரேனு மாக
நாழிகை யேழு காறுங்
கன்னவி றோளி னாய்நீ
வரவிடு காவ லென்றான். 33.

இன்னணம் - இந்தப்படி, பலரும் ஏத்த - பாவலர் பலரும் வாழ்த்த, இனிதின் - இன்புற்று, அங்கு- அம்மண்டபத்தில், இருந்த வேந்தன் - வீற்றிருந்த அரசன், பொன் அணி வாயில் காக்கும் - பொன்மயமான அழகிய வாயிலைக் காக்கின்ற, பூ கழலவனை நோக்கி - வேலைப்பாடமைந்த வீரக்கழல் அணிந்த காவலாளனைப் பார்த்து, "கல் நவில் தோளினாய் - கல் போன்ற திண்ணிய தோள்களையுடையவனே, நாழிகை ஏழுகாறும் - ஏழு நாழிகை வரையிலும், என்னவர் ஏனும் ஆக - யாராயிருந்தாலும், வர - அவர்கள் உள்ளே வரும்படி, நீ காவல் விடு - நீ தடுக்காமல் விட்டுவிடு," என்றான் - என்று விதித்தான்.

கன்னவில் தோள், என்பதிலுள்ள, நவில் என்பது உவம உருபு. இன்னணம் என்பது இன்னவண்ணம், என்பதன் மரூஉ.

---

102. ஆயிடை யலகில் மெய்ந்நூ
லளவுசென் றடங்கி நின்றான்
சேயிடை நிகழ்வ தெல்லாஞ்
சிந்தையிற் றெளிந்த நீரான்
மேயிடை பெறுவ னாயின்
வேந்துகாண் குறுவன் கொல்லோ
நீயிடை யறிசொல் லென்றோர்
நிமித்தக னெறியிற் சொன்னான். 34.

ஆயிடை - அப்பொழுது, அலகு இல் - எல்லை இல்லாத, மெய் நூல் அளவு சென்று - மெய்ந்நூல்கள் எவ்வளவோ அவ்வளவும் கற்று, அடங்கி - அக்கல்விக்கேற்ற அடக்கமும் உடையவனாகி, நின்றான் - இருந்தவனும், சேயிடை - தூரத்தில், நிகழ்வது எல்லாம் - நிகழ்பவைகளை யெல்லாம், சிந்தையில் - தன் மனத்தினால், தெளிந்த நீரான் - தெளிந்துகொள்ளுந் தன்மையுடையவனும் ஆகிய, ஓர் நிமித்தகன் - ஒரு நிமித்தகன், "மேய் - உட்சென்று, இடைபெறுவன் ஆயின் - நான் அரசனது சபையில் இடம் பெறுவேனாயின், வேந்து - நமதரசன், காண்குறுவன் கொல்லோ - என்னைக் காண்பானோ, நீ - நீ, இடை - சமயத்தை, அறி - அறிந்து, சொல் - சொல்க," என்று - என்று, நெறியின் - முறைப்படி, சொன்னான் - காவற்காரனிடம் சொன்னான்.

"இப்பொழுது யான் உட்சென்றால், அரசன் என்னோடு பேசுவதற்குத் தகுந்த சமயம் வாய்க்குமோ என்று தெரிந்து சொல்" என நிமித்தகன் வாயில் காப்பாளனுக்குக் கூறினான் என்பது இச்செய்யுளின் பொருள். கற்றுத் துறைபோதல், என்பதுபோல், மெய்ந்நூல் அளவு செல்லல், என்பதும் தேர்ந்த முதிர்ச்சியைக் காட்டும். அ என்னுஞ் சுட்டு ஆ என நீண்டு நிற்பதால் வருமொழி முதல் உயிர், (வகரமல்லாது) யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது. இடை - இடம், சமயம். மெய்க்கல்வி யாராய்ச்சிக்கு அடையாளம் அடக்கமாதலால், "மெய்ந்நூல் அளவு சென்று அடங்கிநின்றான்" என்று நிமித்தகன் இங்குப் பாராட்டப்படலாயினன். மேய் இடை-மேய் என்பது மே என்னும் பகுதியினடியாகப் பிறந்த வினையெச்சம். மே, அடை. போ, என்பது போய் என வினை யெச்சம் ஆவதுபோல் மே, என்பது மேய் என ஆயிற்று. இந்த நிமித்தகனது பெயர் அங்கதன் என்பது தூதுவிடுசருக்கத்தில் தெரிகின்றது.

---

103. ஆங்கவ னரசர் கோமான்
குறிப்பறிந் தருளப் பட்டீ
ரீங்கினிப் புகுமி னென்று
னிறைவனை யவனுஞ் சேர்ந்தான்
வீங்கிருந் தானை யானும்
வெண்மலர் பிடித்த கையா
லோங்கிருந் தானங் காட்டி
யுவந்தினி திருக்க வென்றான். 35.

ஆங்கு - அப்பொழுது, அவன் - வாயிற் காவலாளன், அரசர் கோமான் குறிப்பு அறிந்து - அரசர்க்கரசனாகிய பயாபதி வேந்தனது கருத்தைத் தெரிந்து வந்து, "அருளப்பட்டீர் - (அரசனால் நீர் உத்திரவு) அளிக்கப் பெற்றீர், ஈங்கு இனி புகுமின் - இங்கே இனிச் செல்லுங்கள்," என்றான் - என்று கூறினான். அவனும் - அந்த நிமித்தகனும், இறைவனை சேர்ந்தான் - அரசனை அடைந்தான். வீங்கு - பொங்குகின்ற, இரும் - பெரிய, தானையானும் - சேனையையுடைய அரசனும், வெள் மலர் பிடித்த கையால் - வெண்மையான மலர் ஒன்றை ஏந்திய தன் கையினால் ஓங்கு - உயர்ந்த, இரும் - பெருமைதங்கிய, தானம் - ஆதனத்தை, காட்டி - அவனுக்குக் குறித்துக்காட்டி, "உவந்து இனிது இருக்க - உவகையோடு இனிமையாய் அமர்ந்திடுக", என்றான் - என்று கூறினான்.

---

104. உற்றதன் னொழுக்கிற் கேற்ப
வுலகுப சார நீக்கிக்
கொற்றவன் குறிப்பு நோக்கி
யிருந்தபின் குணக்குன் றொப்பான்
முற்றிய வுலகின் மூன்று
காலமு முழுது நோக்கிக்
கற்றநூற் புலமை தன்னைக்
காட்டுதல் கருதிச் சொன்னான். 36.

உற்ற தன் ஒழுக்கிற்கு ஏற்ப - பொருந்திய தன் (அடக்கமாகிய) ஒழுக்கத்திற்கு இணங்க, குணம் குன்று ஒப்பான்-குணங்களால் மலையை ஒப்பவனாகிய அந் நிமித்தகன், உலகு உபசாரம் நீக்கி - உலகின்

வழக்கப்படி அங்கிருந்தோர் தனக்குச் செய்யவந்த உபசாரங்களைத் தடுத்து, கொற்றவன் குறிப்புநோக்கி- அரசனது குறிப்பைக் கருதி, இருந்தபின் - அமர்ந்த பிறகு, முற்றிய உலகில் - முதிர்ந்த உலகத்தில், மூன்று காலமும் - இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலச் செய்திகளையும், முழுதும் நோக்கி - முற்றி லும் கருதி, கற்ற-தான் கற்ற, நூல் புலமை தன்னை - சாஸ்திர அறிவை, காட்டுதல் கருதி-காட்ட எண்ணி, சொன்னான் - பின்வருமாறு கூறினான்.

கற்றாய்ந்து அடங்கிய குணமும் ஒழுக்கமும் உடையனாதலின் இந்நிமித்தகன் மற்றவர் தனக்குச் செய்ய வந்த உபசாரங்களை வேண்டினானல்லன்.

---

105. கயந்தலைக் களிற்றி னாயோர்
கனாக்கண்ட துளது கங்குல்
நயந்தது தெரியி னம்பி
நளிகடல் வண்ணன் றன்னை
விசும்பகத் திழிந்து வந்தோர்
வேழம்வெண் போது சேர்ந்த
தயங்கொளி மாலை சூட்டித்
தன்னிட மடைந்த தன்றே. 37.

கய - பெரிய, தலை - தலையையுடைய, களிற்றினாய்- யானையை யுடையவனே, கங்குல் - நேற்றிரவு, ஓர் கனாக்கண்டது உளது-நீ கண்ட கனவு ஒன்று உளது. நயந்து அது தெரியின் - அதனை நீ அறிய விரும்பி னால்—, ஓர் வேழம் - ஒரு யானை, விசும்பு அகத்து இழிந்து வந்து - ஆகாயத்திலிருந்து இறங்கிவந்து, நம்பி நளி கடல்வண்ணன் தன்னை - பெருமை பொருந்திய கடலின் நிறமுடைய மேன்மகனாகிய திவிட்டனை, வெண்போது சேர்ந்த மாலை சூட்டி - வெண் மலர்களால் தொடுத்த மாலைசூட்டி, தன் இடம் அடைந்தது - தன் இடத்திற்கு மீண்டது. (அன்றே-அசை).

கய நளி என்னும் இவையிரண்டும் பெருமைப் பொருளுடைய உரிச்சொற்கள்.

---

106. மன்மலர்ந் தகன்ற மார்ப
மற்றதன் பயனுங் கேண்மோ
நன்மலர் நகைகொள் கண்ணி
நம்பிதன் னாம மேத்தி
மின்மலர்ந் திலங்கு பைம்பூண்
விஞ்சைவேந் தொருவன் வந்து
தன்மக ளொருத்தி தன்னைத்
தந்துதான் போகு மென்றன் 38.

மல் மலர்ந்து அகன்ற மார்ப - மற்போரின் ஆற்றல் பரவி அகன்றிருக்கின்ற மார்பையுடைய அரசனே, அதன் பயனும் கேண்மோ - அக்கனவின் பயனையும் கேள்—, மின் - பிரகாசமானது, மலர்ந்து - பரவி, இலங்கு - விளங்குகின்ற, பை பூண் - பசும்பொன் ஆபரணங்களை அணிந்த, விஞ்சை வேந்தன் ஒருவன்- வித்தியாதரர் அரசன் ஒருவன், வந்து - இங்கு வந்து, நல் மலர் - நல்ல மலர்கள், நகைகொள் - விளங்கு கின்ற, கண்ணி - மாலையை அணிந்த, நம்பிதன் - திவிட்டனது, நாமம் ஏத்தி - புகழைத் துதித்து, தன் மகள் ஒருத்தி தன்னை - தன்மகள் ஒருத்தியை, தந்து - அவனுக்கு மணஞ்செய்து கொடுத்து, போகும் - போவான். என்றான் - என்று அந்த நிமித்தகன் கூறினான். மற்று, தான், அசைகள்.

---

107. கட்பகர் திவலை சிந்துங்
கடிகமழ் குவளைக் கண்ணித்
திட்பமாஞ் சிலையி னாய்நீ
தெளிகநா ளேழு சென்றா
லொட்பமா யுரைக்க வல்லா
னொருவனோ ரோலை கொண்டு
புட்பமா காண்ட மென்னும்
பொழிலகத் திழியு மென்றான். 39.

கள் பகர் திவலை சிந்தும் - தேனின் திவலை சிந்துகின்ற, கடி கமழ் குவளை கண்ணி - வாசனை வீசும் குவளை அணிந்த, திட்பம் ஆம் சிலையினாய் - வலிய மைந்த வில்லை உடையவனே, —நாள் ஏழு சென்றால் - இன்றையிலிருந்து ஏழுநாட்கள் கழிந்த பிறகு, ஒட்பம் ஆய் உரைக்கவல்லான் ஒருவன்—தெளிவாகச் சொல்ல வல்ல ஒரு தூதன், ஓர் ஓலை கொண்டு - ஒரு ஓலையுடன், புட்பமாகாண்டம் என்னும் - புட்பமாகாண்டம் எனப்படும், பொழில் அகத்து - சோலையின் கண், இழியும் - இறங்குவான், நீ தெளிக - அப்பொழுது நான் உரைத்தது உண்மை யென்பதை உணர்ந்துகொள், என்றான் - என்று நிமித்தகன் கூறினான்.

---

108. என்றவ னியம்பக் கேட்டே
யிருந்தவர் வியந்து நோக்கிச்
சென்றுயர் திலகக் கண்ணித்
திவிட்டனித் திறத்த னேயா
மொன்றிய வுலக மெல்லா
மொருகுடை நீழற் காக்கும்
பொன்றிக ழலங்கன் மார்ப
போற்றிபொய் யன்றி தென்றார். 40.

என்று அவன் இயம்ப - என்று அந்த நிமித்தகன் கூற, இருந்தவர் - அச்சபையில் இருந்தவர், கேட்டு - அதனைக்கேட்டு, வியந்து - ஆச்சரியமடைந்து, நோக்கி- அரசனைப் பார்த்து, "ஒன்றிய உலகம் எல்லாம் - பொருந்திய எல்லா உலகங்களையும், ஒரு குடைநீழல் காக்கும் - ஒரு குடை நிழலில் காக்கின்ற, பொன் திகழ் அலங்கல் மார்ப - அழகு விளங்கும் மாலையை அணிந்த மார்பை உடையவனே, சென்று உயர் திலகம் - மேல் உயர்ந்த திலகத்தையும், கண்ணி - பூமாலையையும் அணிந்த, திவிட்டன் - திவிட்ட குமாரன், இ திறத்தனே ஆம் - இந்தத் தன்மையுடையவனே ஆகின்றான்—போற்றி - வாழ்வாயாக — இது பொய் அன்று - இந்நிமித்தகன் சொன்னது பொய்யாகாது," என்றார் - என்று கூறினர்.

போற்றி, என்பது தாழ்ந்தோர் தம்மில் உயர்ந்தவர்களுக்கொன்று எடுத்துச் சொல்லும்போது உபசாரமாகச் சேர்த்துக்கொள்ளும் மரபுச்சொற்களில் ஒன்று.

---

109. உரையமைந் திருப்ப விப்பா
லோதுநா ழிகையொன் றோட
முரசமொன் றதிர்த்த தோங்கி
யதிர்தலு முகத்தி னாலே
யரசவை விடுத்த வேந்த
னகத்தநூ லவரை நோக்கி
வரையுயர் மாடக் கோயின்
மந்திர சாலை சேர்ந்தான். 41.



இப்பால் - அதன் பிறகு, உரை அமைந்திருப்ப - அவரவர் தத்தமக்கு அமைதியான மொழிகளைச் சொல்லிக் கொண்டிருக்க, ஓதும் நாழிகை ஒன்று ஓட - கடிகைமாக்களால் கூறப்படுகின்ற நாழிகை ஒன்று கழியவும், முரசம் ஒன்று அதிர்த்தது - முரசம் ஒன்று ஒலித்தது. ஓங்கி அதிர்தலும் - அவ்விதம் முரசம் மிகுந்து ஒலித்தவுடன், முகத்தினாலே- தன் முகக்குறிப்பினால், அரசு அவை விடுத்த - இராசசபையில் உள்ளவர்களை விடைகொடுத்து அனுப்பிய, வேந்தன் - பயாபதியரசன், அகத்த நூலவரை - தாம் கற்ற நூலின் பொருளும் அறிவும் தம் மனத்தில் தங்கிய அமைச்சர் முதலாயினோரை, நோக்கி - தன்னுடன் வரும்படி சாடையாகப்பார்த்து, வரை உயர் மாடம் கோயில் - மலைபோல் உயர்ந்த மாடங்களையுடைய தன் அரண்மனையிலுள்ள, மந்திரசாலை - அலோசனை செய்யும் மண்டபத்தை, சேர்ந்தான் - அடைந்தான்.

மந்திர சாலை—இருமொழியும் வடமொழியாதலால் வலிமிகவில்லை. கடிகைமாக்கள் என்பவர், அரசனுடன் எப்பொழுதும் இருந்து, ஒவ்வொரு நாழிகை கழிந்ததும், அவ்வாறு கழிந்ததென்பதை அரசனது புகழோடு சேர்த்து ஒரு பாசுரத்தில அமைத்துப் பாடுபவர்.

---

188910

# யாப்பிலக்கணம்

## தளை

[213-வது பக்கத் தொடர்ச்சி]

### கலித்தளை.

ஆசிரியத்தளையும் வெண்டளையும் ஆகுமாறு கண்டோம். இனிக் கலித்தளை ஆமாறு காண்போம். நிலைச்சீர், வெண்சீரெனப்படும் நேரசையை யீற்றிலுடைய மூவசைச் சீராயிருக்க, வருஞ்சீர்முதலிலும் நேரசையே நிற்குமாயின் அது வெண்சீர்வெண்டளையாவது கண்டீர்:—

வடிநெடுங்கண் வெள்ளம்போய்-சிறப்புடை வெண்சீர் வெண்டளை.
உள்ளம்போய் நாண்போய்—சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

வெண்சீர் வெண்டளை பிறழ்ந்தால் அது கலித்தளையாம் என நினைவிற்கொள்ளலாம்:—

பூந்தண்டார் புலர்சாந்தின்—கலித்தளை.
சுடர்கொண்ட நறுநுதல்—கலித்தளை,

எனவே, நிலைச்சீர் நேரீற்று மூவசைச் சீராக இருக்க (வெண்சீர்—காய்ச்சீர் — வெண்பாவுரிச்சீர்) வருஞ்சீர்முதலில் (அது எச்சீராயிருப்பினும்) நிரையசை நிற்குமானால் கலித்தளை அமையும். ஆதலின் கலித்தளை அமைவதற்கு

1. நிலைச்சீர் காய்ச்சீரா யிருக்கவேண்டும்
2. வருஞ்சீர், எதுவாயினும் இருக்கலாம்;
ஆனால் அதன் முதலசை மாத்திரம் நிரையசையாக இருக்கவேண்டும்.

குறிப்பு:—நிலைச்சீர் மூவசைக் காய்ச்சீராயல்லாமல், நேரசையை ஈற்றிலுடைய தேமா புளிமா என்னும் ஈரசைச்சீர்களாயின், வருஞ்சீர் முதலில் நிரையசைவர, இயற்சீர் வெண்டளையாகிவிடும் என்பதையும், வருஞ்சீர் முதலில் நேரசை வருமானால் ஆசிரியத்தளை ஆகிவிடும் என்பதையும் நினைவிற்கொள்க. ஆகையாற்றான் வெண்சீர் வெண்டளை பிறழ்ந்தால் கலித்தளையாகும் என்று கூறினோம்.

ஆசிரியத்தளை வெண்டளைகளைப் போலவே, கலித்தளையினும் சிறப்புடைக் கலித்தளை சிறப்பில் கலித்தளை என இரண்டு வகைகள் உள. இரண்டிற்கும், நிலைச்சீர் காய்ச்சீரா யிருக்கவேண்டியது அவசியம்; வருஞ்சீர் முதலில் நிரையசை இருக்கவேண்டுமென்பதும் அவசியம்; ஆனால் அவ்வருஞ்சீரும் காய்ச்சீராயிருக்குமானால், அத் தளைச் சிறப்புடைக் கலித்தளையாகும். வருஞ்சீர் கனியீற்று உரிச்சீராகவேனும் அல்லது இயற்சீராகவேனு மிருக்குமாயின் அத்தளை, சிறப்பில் கலித்தளை யாகும்:—

முருகவிழ்தா மரைமலரோன்—முரு - கவிழ் - தா + மரை-மல-ரோன் = சிறப்புடைக் கலித்தளை.
மாவீன்ற தளிர்மிசை—மா-வீன்-ற + தளிர் - மிசை = சிறப்பில் கலித்தளை.

| நிலைச்சீர் | + | வருஞ்சீர் | = | தளை |
|---|---|---|---|---|
| தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் | + | கருவிளங்காய், புளிமாங்காய் | | சிறப்புடைக் கலித்தளை. |
| | | கருவிளங்கனி, புளிமாங்கனி, புளிமா, கருவிளம் | | சிறப்பில் கலித்தளை. |

இனிக் கலித்தளை அமைந்துள்ள செய்யுள்கள் சில உதாரணங் காட்டுவோம்:—

சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண்
விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையாரை
முலைக்கோட்டு விலங்கென்றங் குடனாகி முன்னின்ற
கலைக்கோட்டுப் பெயர்முனியாற் றுயர்நீங்கக் கருதினான்.

[வில்லைப்போல் வளைந்த நெற்றியும், குதலைமிழற்றுகின்ற சிவந்த கொவ்வைக்கனிபோன்ற வாயையும், கரிய பெரிய கண்களையும், விலைபேசிக் கொடுக்கின்ற பெரிய அல்குலையும், மின்னலைப்போல் துவள்கின்ற இடையையும் உடைய கணிகையரை, முலையாகிய கொம்புகளையுடைய மிருகங்கள் என்று எண்ணி அவர்களோடு வந்து முன்நின்ற கலைக்கோட்டுமுனி என்னும் பெயருடைய முனிவனால் தனக்குப் புத்திரனில்லாத துயரத்தைத் தயரதன் நீக்கிக்கொள்ளக் கருதினான்]

இந்தச் செய்யுளில் கலித்தளையும் வெண்டளையும் விரவி வந்திருக்கின்றன:—

சிலைக்கோட்டு நுதற்குதலைச் = புளிமாங்காய் + கருவிளங்காய். நிலைச்சீர் காய்ச்சீர், வருஞ்சீர் முதலில் நிரையசை யிருக்கின்றது. ஆகையால் இது கலித்தளை. வருஞ்சீரும் காய்ச்சீராயிருப்பதால்— சிறப்புடைக் கலித்தளை.

நுதற்குதலைச் செங்கனிவாய்க் = கருவிளங்காய் + கூவிளங்காய். வருஞ்சீர்முதலில் நிரையசையல்லாது நேரசை நிற்றலால், இது கலித்தளையாகாது. இது சிறப்புடை வெண்சீர் வெண்டளை

செங்கனிவாய்க் கருநெடுங்கண் = கூவிளங்காய் + கருவிளங்காய் = சிறப்புடைக் கலித்தளை.

கருநெடுங்கண் விலைக்கோட்டும் = கருவிளங்காய் + புளிமாங்காய் = சிறப்புடைக் கலித்தளை

விலைக்கோட்டும் பேரல்குன் = புளிமாங்காய் + தேமாங்காய் = சிறப்புடை வெண்சீர் வெண்டளை.

பேரல்குன் மின்னுடங்கு = தேமாங்காய் + கூவிளங்காய் = சிறப்புடை வெண்சீர் வெண்டளை.

மின்னுடங்கு மிடையாரை = கூவிளங்காய் + புளிமாங்காய் = சிறப்புடைக் கலித்தளை.

மிடையாரை முலைக்கோட்டு = புளிமாங்காய் + புளிமாங்காய் = சிறப்புடைக் கலித்தளை.

முலைக்கோட்டு விலங்கென்றங் = புளிமாங்காய் + புளிமாங்காய் = சிறப்புடைக் கலித்தளை.

விலங்கென்றங் குடனணுகி = புளிமாங்காய் + கருவிளங்காய் = சிறப்புடைக் கலித்தளை.

குடனணுகி முன்னின்ற = கருவிளங்காய் + தேமாங்காய் = சிறப்புடை வெண்சீர் வெண்டளை.

முன்னின்றகலைக்கோட்டுப் = தேமாங்காய் + புளிமாங்காய் = சிறப்புடைக் கலித்தளை

கலைக்கோட்டுப் பெயர்முனியாற் = புளிமாங்காய் + கருவிளங்காய் = சிறப்புடைக் கலித்தளை.

பெயர்முனியாற் றயர்நீங்கக் = கருவிளங்காய் + புளிமாங்காய் = சிறப்புடைக் கலித்தளை.

றயர்நீங்கக் கருதினன் = புளிமாங்காய் + கருவிளம், நிலைச்சீர் காய்ச்சீராக, வருஞ்சீர் முதலில் நிரையசை வந்திருத்தலால் இது கலித்தளையே. எனினும் வருஞ்சீரும் காய்ச்சீரின்றி ஈரசைச்சீராய் இருப்பதால், இது சிறப்பில் கலித்தளை.

கலிப்பாட்டிற்குரிய தளை கலித்தளை. ஆயினும் கலிப்பாக்களில் (வெண்பாவைப்போல்) எல்லாத் தளைகளும் கலித்தளைகளாகவே இருக்கவேண்டும் என்னும் நியதியில்லை. ஆசிரியத்தளையும் வெண்டளையும் விரவி வரினும் வரலாம்:—

ஈதலிற் (1) குறைகாட்டா (2) தறனறிந் (3) தொழுகிய (4) தீதிலான் (5) செல்வம்போற் (6) றீங்கரை (7) மரநந்தப் (8) பேதுற (9) மடமொழி (10) பிணையெழின் (11) மானோக்கின் (12) மாதரார் (13) முறுவல்போன் (14) மணமௌவன் (15) முகையூழ்ப்பக் (61) காதலர்ப் (17) புணர்ந்தவர் (18) கதுப்புப்போன்ற (19) கழல்குபு (20) தாதொடுங் (21) தளிரொடுங் (22) தண்ணற (23) றகைபெறப் (24) பேதையோன் (25) வினைவாங்கப் (26) பீடிலா (27) வரசனுட் (28) டேதிலான் (29) படைபோல (30) விறுத்தந்த (31) இளவேனில்.

[கொடையில் குறைகாட்டாமல் அறம் அறிந்து இல்வாழ்க்கை நடத்துகின்ற தீமையில்லாதவனது செல்வத்தைப்போல், இனிய ஆற்றங்கரையில் மரங்கள் செழிக்கவும், கலகத்தை விளைவிக்கின்ற மடமொழிகளையும் பெண்மானின் அழகிய பார்வையையும் உடைய மாதர்களது பற்களைப்போல் மணமுடைய மல்லிகைகளின் மொக்குக்கள் மலரவும், காதல்நாயகரைப் புணர்ந்தமாதர்களின் கூந்தலைப் போல், கழன்று வீழ்ந்த தாதினோடும் தளிரோடும், குளிர்ந்த கருமணல் அழகுபெறவும், மதியில்லா அமைச்சன் காரியங்கள் செய்வதும் பெருமையில்லா அரசனால் ஆளப்படுவதும் ஆகிய ஒரு நாட்டிலே, பகைவர் படைவந்து தங்கிவிடுவதுபோல் தங்கிவிட்டது இந்த இளவேனில்—எனக் காதலனைப் பிரிந்திருந்த காரிகையொருத்தி இளவேனில் பருவத்திற் காற்றாது வருந்தினள்]

இதனில் பல தளைகள் வந்திருக்கின்றனவேனும் இது கலிப்பாட்டே. எண் குறிப்பிட்டு நாம் காட்டுந் தளைகள் எவ்வாறு அவ்வந்தத் தளைகள் ஆயின என்பதை ஆராய்ந்துகொள்ளல் நல்ல பயிர்ச்சியாம்:—

1. சிறப்பில் நிரையொன்றிய ஆசிரியத்தளை—2. சிறப்பில் கலித்தளை—3. சிறப்புடை நிரையொன்றிய ஆசிரியத்தளை—4. சிறப்புடை இயற்சீர் வெண்டளை—5. சிறப்பில் இயற்சீர் வெண்டளை—6. சிறப்பில் வெண்சீர் வெண்டளை—7. சிறப்பில் நிரையொன்றிய ஆசிரியத்தளை—8. சிறப்பில் வெண்சீர் வெண்டளை—9. சிறப்புடை நிரையொன்றிய ஆசிரியத்தளை—10. சிறப்புடை நிரையொன்றிய ஆசிரியத்தளை—11. சிறப்பில் இயற்சீர் வெண்டளை—12. சிறப்பில் வெண்சீர் வெண்டளை—13. சிறப்பில் நிரையொன்றிய ஆசிரியத்தளை—14. சிறப்புடைக் கலித்தளை—15. சிறப்புடைக் கலித்தளை—16. சிறப்பில் வெண்சீர் வெண்டளை—17. சிறப்புடை நிரையொன்றிய ஆசிரியத்தளை—18. சிறப்பில் நிரையொன்றிய ஆசிரியத்தளை—19. சிறப்பில் கலித்தளை—20. சிறப்புடை இயற்சீர் வெண்டளை. 21. சிறப்புடை நிரையொன்றிய ஆசிரியத்தளை. (22)சிறப்புடை நிரையொன்றிய ஆசிரியத்தளை—23. சிறப்புடைய நிரையொன்றிய ஆசிரியத்தளை—24. சிறப்புடை இயற்சீர் வெண்டளை—25. சிறப்பில் நிரையொன்றிய ஆசிரியத்தளை—26. சிறப்பில் வெண்சீர் வெண்டளை—27. சிறப்புடை நிரையொன்றிய ஆசிரியத்தளை—28. சிறப்புடை இயற்சீர் வெண்டளை—29. சிறப்பில் நிரையொன்றிய ஆசிரியத்தளை—30. சிறப்புடைக் கலித்தளை—31. சிறப்புடைக் கலித்தளை.

இனி அடுத்தவாரம் வஞ்சித்தளை கற்கலாம்.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:
டிப்போ, பம்பாய்
கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
மதுரை
காஞ்சீபுரம்.



# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[215-வது பக்கத் தொடர்ச்சி]

இருபெருங் கவிவர ரொருங்குற வரைந்தனர்.

காலமும் இடனுங் கைக்கொண்ட கருமமுங் கடந்த
தோர் நீண்ட நோக்கினர் மாபெருங் கவிஞராவார். உலகத்திலிவர் ஒவ்வொருவர் ஒவ்வோர் காலத்து ஒவ்வோரிடத்துத் தத்தம்மொழியெனும் வானத்துத் தங்நேரில்லாத் தாரகைகளென உதித்துக் காட்சிக்கிலக்காய்த் திகழ்ந்தகாள் ஓராயுள் எல்லைத்தேனும் பின்னின்ற ஊழிகாறும் கலைநலம் பெற்றவர்தம் இதயந்தன்னுள் இருளகற்றிப் புத்தொளி விளங்கவைக்கும் பெருமையால் அவர், மாயாத தம் இலக்கிய நூலெனும் உருவத்தோடு அன்றும் இன்றும் என்றும் நம்மிடையே குடிவாழ்க்கை அமர்ந்திருப்பது திண்ணம். இதுவுமன்றி, எண்ணரிய நெடுந்தூரங்களுக் கப்பாலிருக்கும் விண்மீன்கள் சிற்சில இராசிகளாய் ஒருங்குசேர்ந்து விளங்குமாப்போல், கால இடமொழிகளாற் மிகவகன்ற புலவர்பெருமக்களும் கருத்தின் ஒற்றுமையால் நெருங்கிய இனத்தராகித் தோன்றுகின்றார் என்பதும் புதுமையன்றே. இவ்வண்ணம், உலகமடங்கலும் ஒளிகதுவித் திகழ்கின்ற உடுக்களனையார், ஆங்கிலவாகாயத்தில் ஷேக்ஸ்பியரும் தமிழ்விசும்பில் கம்பரும் என இருவர். இவ்விருவரையும் இணைத்துவைக்குங் கருத்தொன்றைக் காணுதற்கோர் தருணம் இச்செவியில் வாய்க்கலாயிற்று.

இராமபிரமன், திருமகளைப் புணர்தர முனைந்து அரன்வில்லின் உரம்வாங்கப் புக்ககாலை மதிலையுள்ளோர் வாய்நின்றும், நிலமகளைப் புணரநின்ற இந்நாள் அயோத்தியுள்ளோர் வாய்நின்றும் கம்பர்பிரான், அநுமானத்தில் உடன்பட்டுக் காட்சியில் கலைகின்றவோர் பொதுஜன மனவியற்கையின் நுண்மையை விளையாட்டாக எளிதிற் காட்டிவிட்ட இப்புணர்ப்பிற்கு இணையாய சூழ்ச்சி, "ஜூலியஸ் ஸீஸர்" என்னும் ஷேக்ஸ்பியர் நாடகமொன்றில் தென்படுகின்றது.

இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் குடியரசு கொண்டாடிய உரோமாபுரியின் வெலற்கரிய பகைவரையெல்லாம் வென்று பற்பல நாடுகளை அடக்கி மீண்ட படைத்தலைவன் ஜூலியஸ் ஸீஸர் என்பவன். இவனுடைய ஆற்றலையும் அறிவையும் கரையரிய பெரும் புகழையும் பாராட்டிய சனங்களும் சட்டசபை அங்கத்தினர்களும் ஆட்சியின் அதிகாரமனைத்தையும் அவனுக்கே அளித்துவைத்தனர். ஆயினும் அவன் அரசனல்லன். குடியாட்சி முறையில் முடியுடை வேந்தனுக் கிடமில்லை. எனினும், இவனிடத்தில் வைத்திருந்தவோர் அளப்பரிய மதிப்பினால், பொது சனங்களின் விருப்பிற்கிணங்கி, 'நீ முடிசூட்டி எமக்கு அரசனாய் அமரவேண்டும்' என்று அந்நகர முதன்மையோர் ஒன்றுகூடி அவனை இனிது வேண்டிவேண்டி மூன்றுமுறை அவனுக்குக் கோமுடி கொடுக்க நீட்டினர். அம்மூன்று முறையும், "இக் குடியாட்சியைக் கெடுத்து யான் என்னரசாக மாற்றிக்கொள்ளேன்" என மறுத்துவிட்டான். உரோமாபுரி பெருமக்களில், காஸியஸ், புரூடஸ்என இருவர் இருந்தனர்.

இவர்தாம் ஒருகாலத்தில் ஜூலியஸ் ஸீஸரிற்கு விரோதமாய்ப் பொருதாரெனினும் அவர்களை வென்றடக்கியபின் ஸீஸர் அவர்களைப் பொறுத்துவிட்டதுமன்றித் தன்னுடைய அண்மிய நண்பர்களெனவும் ஏற்றுக்கொண்டிருந்தனன். இப்பொழுதோ, ஜூலியஸ் ஸீஸருக்கு வாய்த்திருந்த உயர் பதவியையும் ஜனங்கள் அவனைக் கொண்டாடிய மிகுதியையும் காணக் காஸியஸ் என்பவன் உள்ளத்தில் பொறாமை என்னும் கருநாகம் பணம்விரித்துச் சீறத் தலைப்பட்டது. ஜூலியஸ் ஸீஸரின் நாசத்தைச் சூழ்வதே கருமமெனத் துணிந்தான். துணையின்றி முடிக்கவல்லதோர் காரியம் இது அன்றாதலின், புரூடஸ் என்பவனை அண்மி, "நீயிருக்க இந்த ஸீஸருக்கேன் ஒருதனிப் பதவி நிலைக்கவேண்டும். அவனை அகற்றினாற்றான் ஆகாதோ...ஸீஸரோ பேராசையுடையவன்...எப்படியும் தானே அரசனாகிவிடவேண்டும் என்ற எண்ணம் அவன்பால் ஒன்றியுளது...இப்பொழுதே நம்மைவிடப் பலபடி உயர்ந்திருக்கின்ற அவன் இனி அரசனும் ஆய்விட்டானெனின் நம்மையெல்லாந் தன் காலின் கீழ்த் துவைத்தொழிப்பான் திண்ணம். குடியரசு நலங்களை இழந்து தனியாட்சியின் கொடுமைக்கு ஆளாக நிற்கின்றவோர் விபத்தினின்று நீயே உரோமாபுரியைக் காக்கவேண்டும். தேசபக்தியுடையவனாயின் இது நின் கடன்" என்று இன்னபல குறிப்பிற் சிலவும் வெளிப்படச்சிலவும் அவனது மனத்துட் புகுத்தவே, புரூடஸ், ஸீஸரைச் சதிக்கொலைசெய்து அழித்துவிடுவதென நிச்சயங்கொண்டனன். தானும் காஸியஸும் மாத்திரம் இதனை முடித்துவைக்கப் போதாது. மற்றுஞ்சிலர் உதவியும் வேண்டும். எந்நிமித்தம் காட்டி மற்றவர்களை இச்சதிக்கொலைக் கோட்டியில் சேர்ப்பதெனச் சிந்தித்த புரூடஸ், "ஜூலியஸ் ஸீஸரிடத்தில் தற்போது எவ்விதக் கொடுமையுந் தோன்றவில்லை. ஆகையால் கொடுங்கோன் மன்னனாக முயலும் இவனைக் கொன்றுதீர்தல் வேண்டும் என உரைப்பதற்கியலாது. எனவே, ஸீஸர் அரசனே ஆவான்என்பது திண்ணம். அப்படி அரசனானபின் அவன் குணம் எப்படி மாறுமோ! அவன் தற்போது பூண்டிருக்கும் தாழ்மை நடுநிலைமைகள் எல்லாம் தான் மேலேமேலேமுன்னேறுவதற்கேற்ற கருவிகளாகவே கைக்கொண்டிருக்கலாம். உயர்ந்த பதவியை அடைந்துவிட்டபின் தன்னை ஏற்றிய ஏணியை மதியாது, வானத்திலேயே கண்வைத்து நிற்றல் மாந்தரியற்கையாவது யாவரும் அறிந்ததே. ஆகையால், இந்த ஸீஸரும் அவ்வாறுதான் செய்வான். ஆதலின், பிற்காலம் அவன் அவ்வண்ணம் கொடியனாய் மாறி இந்த உரோமாபுரிக்குத் தீங்கிழைக்க இடமின்றி இப்பொழுதே அவனைக்கொன்று தீர்ப்பதே தக்கது, எனப் புகலுவேன்" என்று தன் வினைசெயல் வகையைத் தேர்ந்தவனாயினான். இதனில் அடங்கிய அத்தனையும் அநுமானமே. கொடுக்க வந்த முடியை மறுத்தனனாலும் அது கபடமே என விலக்கி "ஸீஸர் முடிசூடிக்கொள்ள வேண்டுமெனும் பேராவுடையனாய்த்தான் இருப்பான்" என அநுமானிக்கலாம் என்கின்றான் புரூடஸ். "இப்பொழுது

கொடியவ னல்லனுயினும் முடியொன்று தன் சிரத்தில் கவிழ்க்கப்பெற்றபின் அன்னுன் கொடுங்கோல் மன்னனுகித் தன்போன்றவர்களேயும் குடிகளேயும் உழக்குவான்" என்று புரூடஸ் பகரநினைத்ததும் அநுமானமே. காவியஸ் தன் பொல்லாப் பொருமையால் விதைத்த அவ் அநுமான வித்தைப் புரூடஸ் வளர்க்க உடன்பட்டான். இந்தச் சதிக்கொலேச் சங்கத்தில் லின்னு, காஸ்கா, டெஸியஸ் முதலிய மற்றுஞ் சிலருஞ் சேர்ந்தனர். ஜூலியஸ் ஸீஸர் முடியுடை வேந்தனுக முயலலாமெனவும், வேந்தனுயபின் கொடுங்கோன்மை புரிவானெனவும் கொண்டதோர் அநுமானம் அந்தச் சங்கத்தை இயக்கிவைத்தது. இவ்வண்ணம் அநுமானத்திற் காட்செய்யும் இவர்தாம் காட்சிச்செய்தியில் உடன்படாது இகலுந் தன்மையை ஷேக்ஸ்பியர் சிறியதோர் சம்பவத்தால் காட்டுகின்றார். ஸீஸரைக் கொன்றுவிடக் கருதியநாள் பொழுது புலராமுன்னம், டெஸியஸ், காஸ்கா,லின்னு முதலாயிஞேரை அழைத்துக்கொண்டு காவியஸ், புரூடஸின் மனேக்கு வந்தான். இருள்பிரியக் கீழ்த்திசை வெளுக்கும் வேளே அது. காவியஸும் புரூடஸும் சிறிது விலகிநின்று தமக்குள்ளே உரையாடியிருந்தனர். அதற்கிடையில் மற்ற மூவரும் பின் வருமாறு பேசிக்கொள்ளலாயினுர்:—

டெஸியஸ்:—கீழ்த்திசை இது ; பொழுது விடிவது அங்குத்தான் அன்ருே ;

காஸ்கா:—அன்று.

லின்னு:—என்னேமன்னிப்பீர்.—இதுவே; மேகத்தின் விளிம்புபோலத் தோன்றுமப் புகர்நிறக் கோடுகள் பகலிற்கு முன்வரும் தூதர்களாம்.

காஸ்கா:—நீவிர் இருவீரும் மயங்குகின்றீர். நான் என் வாளாற் குறிக்கும் இவ்விடத்தில்தான் பரிதி எழுகின்றது..................(இதற்குள் புருடஸும் காவியஸும் வந்து இவர்களுடன் சேர்ந்துவிடவே அவர் தம் சம்பாஷணே சதிக்கொலேச் சூழ்ச்சிசம்பந்தமாய் மாறிவிடுகின்றது.)

இடைப்பிறவரலாய் நிகழ்ந்த இப்பேச்சுத் தன்னளவில் மிகமிகச் சிறியது. எனினும் அநுமானத்திற் குடன்பட்டு ஜூலியஸ் ஸீஸரையே வதைப்படுதென வந்துநிற்கும் இவர்தாம் கதிரவன் உதிக்கு மிடத்தைக் காண்பதில் மூவரும் ஒவ்வாமல் மாறுமாருகிப் போவார். மாநுட மனத்தின் புணர்ப்பு இவ்வாறு ஷேக்ஸ்பியரால் செவ்விதின் உரைக்கப் பெற்றது.

அயோத்தியின்கண் அந்நாள் வாராதார், இலங்கை நிருதரும் குலக்கிரிகளும் திசைக்கயங்களும் எனக் கம்பர் ஒழித்துக்காட்டலால், உலகமடங்கலும் அங்கொருங்கு கலந்திருந்ததெனின், 'ஏகுமின் ஏகுமின்' என்ன யாவரும் இடையிடை நிற்றலன்றி வேறெது இயல்வதாகும். இதனிடையே இந்திரற்குவமை சாலும் இருநிலக் கிழவர்களும், நற்பயன் தவத்தி னுய்க்கும் நான்மறைக் கிழவர்களும், வந்து, மௌலிசூட்டு மண்டபம் புக்கார். அரசர்க்கும் அந்தணர்க்கும் இடைகிடக்கும் ஓர் அரிய வேற்றுமையை இங்குக் காட்டுகின்றார் கம்பர். தாம் செய்த நல்வினைப் பயன்களே அரச செல்வமாய்த் துய்ப்பவர் இந்திரற்குவமைசாலும் வேந்தர். அந்தணர்களோ, தம் நல்வினைப் பயனுய்த் தவமே உய்ப்பவர். தவத்தால் நன்மை பெறலாம்—அந்நன்மை யாதெனின் இவ்வந்தணர் திறத்து மீண்டும் அருந்தவங்கள் புரியுமோர் பாக்கியம் பெறுவதே. இப்படி, தக்க செவ்வியிற் சில நுண்ணிய வேற்றுமைகளேத் தெளியவைப்பது கம்பர் திறங்களிலொன்று. இவ்வேற்றுமைகளே, தனித்தனியாய் இயங்குவனபோல் தோன்றுகின்ற அடிகளினின்று காட்டுவது இக் கவிஞர் குணம். முன், நகரப் படலத்தில்.

உன்னரு மருமறை யோது மண்டம்
பன்னருங் கலேதெரி பட்டி மண்டபம்

என ஒரு செய்யுளின்கண் தனித்தனி மண்டபங்களேக் குறித்துநின்ற இரண்டு அடிகளில் அவ்வவ் மண்டபங்களுக்குக் கொடுத்த அடை மொழிகளால் ஓதுதற் கெளிதேனும் உணர்தற் கரியதாய மறைகளுக்கும், உணர்தற்குரியதாய் உரைத்தற்கரியதாகி நிற்கின்ற கலேகளுக்கும் உள்ள வேற்றுமையை விளக்கிய வாங்கே, இங்கு. 'இந்திரற்குவமை சாலும் இருநிலக் கிழவர்" என்ன ஓர் செய்யுளிலும், மறுசெய்யுளில்,"நற்பயன் தவத்தின் உய்க்கும் நான்மறைக்கிழவர்" என்றும் வைத்து, வேள்விப் பயனேத் துய்க்கின்ற இந்திரனேய வேந்தருக்கும், அவ்வேள்விப் பயனேயும் தவத்திலேயே உய்க்கின்ற அந்தணருக்கும் வேற்றுமை நடந்தவழி விளக்கிக் காட்டினுர்.


இவர்களுக்கிடையே வசிட்டன் வந்தெய்தி, சிங்காதனமிட்டுச் சடங்கிற்குரியவை அமைத்துத்தயரதனேக் கொணருமாறு சுமந்திரனே விடுப்ப அவன், வேந்தனிருந்தவிடம் வினவியறிந்து கைகேயி கோயிலே நண்ணப் "பெண்டிரிற் கூற்றம் அன்னுள் பிள்ளேயைக் கொணர்க" என்னலோடும், வள்ளலிராமன் வளமனே துன்னி,

தன்திரு உள்ளத் துள்ளே தன்னேயே நினேயு மற்றக்
குன்றிவர் தோளி னுனேத் தொழுதுவாய் புதைத்து,
"யாவரும் நின்னேப் பரிவினேடும் எதிர் நோக்கி
நிற்கின்றனர், [எப்
சிற்றவை தான மாங்கே கொணர்கெனச் செப்பினு
பொற்றட மகுடஞ் சூடப் போதுதி விரைவின்
எனப் பகர்ந்தவளவில்,

ஐயனு மச்சொற் கேளா வாயிர மௌலி யானேக் [றத்
கைதொழு தரசவெள்ளங் கடலெனத்தொடர்ந்து சுற்
தெய்வகீ தங்கள் பாடத் தேவரு மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைத்து நோக்கத் தாரணி தேரிற் சென்ருன்.

பெருமாளிற் பலபடி பெரியார் அப்பெருமாளின் பக்தர்கள். ஏனெனில், மக்கள் தாம் நினேந்தேத்தித் தொழுதற்கோர் பொருளுளது. எம்பிரானுக்கோ ஏதுமில்லே. ஆதலால் இவ்வேழை இராமன், தன் திருநாமத்தையே தான் சாற்றவேண்டியவனுயினுன். இன்று, தன் திரு உள்ளத்துள்ளே தன்னேயே நினேக்க வேண்டியிருக்கின்றது. ஆயிர மௌலியானேக் கைதொழும் போதும், தன் நாமஞ் சாற்றித் தன்னேயே நினேந்தும் தொழுபவனுதலால் தன்னேயே தொழுவதல்லால் வேறு நெறி அவனுக்கில்லே. கடவுளொன்றுடைய மனிதர் பெற்றபேறு அக்கடவுளே பெற்றதில்லேயெனின்—அரிது அரிது மாநுடராதல் அரிது.




அசல் சேப்ரோல் வாடை அசல் பசும்நெய் மணம்
இன்புறும் காரம் இவைகள் ஒருங்கே அமைந்ததும்
90–வருஷகாலமாக உலக முழுவதும் பிரசித்தி
பெற்றதுமான

## அசல் ஷண்முகம் பட்டணம் பொடி

இடம்பொருள் ஏவல் எள்ளளவும் குன்ருது சடமெனும் புகையிலே சகல
விதத்திலும் தெரிந்தெடுத்து ஏற்ற முறைப்படி முடித்து
வாங்குவோர் பயனேயே மிக நாடுவது எது ?
மண்ணில்வாழ் மாந்தர் வாழ்க்கைக் கின்றியமையாததும்
மகிழ்ச்சி யூகம் ஊக்கம் முதலியவை உபயோகிக்கும் போதெல்லாம்
ஊட்டுவதும் அவரவர் தம் மனத்துயரை ஓட்டுவதும் எது ?

அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே !!

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி


எல்லாரையும் எப்பொழுதும் ஏமாற்ற முடியாதென்ற சொல்லால் முக்காலத்
திலும் முதன்மைபெற்ற மூதுரையின் முறைபற்றி வியாபாரம் நடத்திப்
பரவைசூழ் புவியில், பாவலர், நாவலர் ஆவலோடு பன்முறை
ஷண்முகம் பட்டணம் பொடி ! ஷண்முகம் பட்டணம்
பொடி !! எனப் பதம்பாடும் எங்கள்

## அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே!!

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி, லிமிடெட்.
போஸ்ட் பாக்ஸ் 140, மதராஸ்.

குறிப்பு:—பல போலிப்பொடிகள் தோன்றித் தேகாரோக்கியத்திற்கு இடையூரு யிருப்பதால் 90-வருஷகாலமாகப் பிரசித்தி பெற்று உலகடிரேட் மார்க்குள்ள அசல் ஷண்முகம் பட்டணம் பொடியையே உபயோகித்து ஆனந்தத்தை அடையுங்கள்.

இந்த விளம்பரத்தைத் தங்கள் ஊர்ப்பொடிக் கடைகளில் காட்டி இதில் குறித்திருக்கும் அசல் ஷண்முகம் பட்டணம் பொடி இல்லாத 6-கடைகளின் விலாஸங்களேத் தெரிவித்தால் ஒரு அழகிய காலண்டர் இனமாகக் கொடுக்கப்படும்.



| நோயற்ற : : <br> : : வாழ்வே | ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற <br> இரு அருமருந்துகள் | குறைவற்ற : <br> : செல்வம் |
|---|---|---|

**"ஸித்தகல்ப மகரத்துஜம்"**

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளைநீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்ருத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

**"மஹா சந்தனுதித் தைலம்"**

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதும் தயங்காதீர்கள்.

**மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.**

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.



இனம்! இனம்!!

**வைத்திய வித்தியா**

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்ருத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,

1/94, சைனு பஜார், மதராஸ்.






**விஜய ரக்ஷித கவசம்.**

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினலும், ஓர் அபூர்வ மூலிகையினலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிருர்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ 5. தங்கம் ரூ. 15.

விலாசம்:—புரபசர். கா. கோவிந்தாச்சார்,

மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.



**Estd. NATIONAL 1906**

**INSURANCE COMPANY LIMITED.**

*Head Office*:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

*The "National" will surpass any other Company in these tests.*

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.

(2) The Company has never contested a claim on a technicality.

(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to:— R. G. DAS & CO., *Managers.*

**T. ANANTACHARI**, B.A., Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD., Madras Branch, 113, Armenian Street, G. T., Madras.



**- நவீன பாரதி -**

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

**மூன்ருவது ஆண்டு**

நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. **2 0 0**

வெளி நாடு ,, ரூ. **2 8 0**

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—**R. சுப்ரமணியம்.**

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.





**— லோத்ரா —**

ஸ்திரீகளுக்கு

மகிழ்ச்சியையும்

ஆரோக்கியத்தையும் தரும்.

**— அம்ருதா —**

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

**— அர்கா —**

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

**கேசரி குடீரம்**

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். : : : : சென்னை.



**அசோகா சால்ட்**

(ரிஜிஸ்டர்ட்)

**(அசோகா உப்பு)**

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.


விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

**அசோகா கம்பெனி,**

**லிமிடெட், சென்னை.**



**பி. வி. ராஜன் பட்டணம் பொடி**




காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. டை சாதா ரகம்பொடி வீசை ரூபா 3½.

டாக்டர் B. S. மல்லையா M. B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த

R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்குஅணு 4. டஜன் ரூபா 2¼ டைஒரு சேர்டின் ரூபா 1¾ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பேனி,

நெ. 44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்"



**வாசகசாலை, புத்தகசாலைகளுக்கு ::**

**:: ஓர் அரிய சமயம்!**

1931ஷு ஏப்ரல்மாதம் 1-ந்தேதி முதல் ஜூன் மாதம் 30-ந்தேதிவரையில் பிரசித்தி பெற்ற வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் எழுதியுள்ள கீழ்க்கண்ட 13 நாவல்களுக்கு ஏககாலத்தில் ஆர்டர் செய்யும் வாசகசாலைகளுக்கும் (லைப்ரெரி) புஸ்தகசாலைகளுக்கும் 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும். டை நாவல்களில் 1 அல்லது 2க்கு ஆர்டர் செய்வோர்களுக்கு ரூபாய்க்கு 2 அணு கமிஷன் கொடுக்கப்படும்.

வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் நாவல்கள்.

| | | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| 1. | பூர்ண சந்திரோதயம் | 4 | பாகங்கள் | 7 | 8 |
| 2. | மதனகல்யாணி | 3 | ,, | 4 | 8 |
| 3. | சௌந்தர கோகிலம் | 3 | ,, | 6 | 0 |
| 4. | திகம்பரசாமியார் | 2 | ,, | 3 | 0 |
| 5. | ,, பால்யலீலை | 2 | ,, | 5 | 0 |
| 6. | மாயாவினோதப்பரதேசி | 2 | ,, | 5 | 0 |
| 7. | மேனகா ,, | 2 | ,, | 3 | 0 |
| 8. | பாலாமணி | | | 2 | 8 |
| 9. | வஸந்தமல்லிகா | | | 1 | 8 |
| 10. | வித்யாசாகரம் | | | 1 | 4 |
| 11. | திவான் லொடபடசிங் பகதூர் | | | 0 | 12 |
| 12. | திலோத்தமா | | | 0 | 12 |
| 13. | மாணிக்கவாசகர் | | | 0 | 8 |

பி. இரத்தின நாயகர் & சன்ஸ்,

புஸ்தக வியாபாரிகள்,

41. வெங்கட்ராமய்யர் தெரு, ஜி. டி. மதராஸ்.


**கலா நிலயம்**

1930 பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன. 1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வரைக.

விலை:—(தாபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| பைண்ட் செய்யாதது | ரூ. 8-0-0 | ரூ. 9-8-0 |
| காலிகோ கில்ட் | 9-8-0 | 11-0-0 |
| ஆப்லெதர் கில்ட் | 10-0-0 | 11-8-0 |

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—156

புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

சமையல் - -
சுகம் - -
வேண்டுமானுல்
ருக்மணி
குக்கர்
வேண்டும்

இது நாடறிந்த விஷயம். அனுபவசாலிகள் தம் செயலைப் பின்பற்றி நீங்களும் ஒரு அடுக்கு வாங்குங்கள்.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய ஏழு அடுக்குகள் ரூ.12, 16, 20, 25, 31, 37, 44.
விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (12) சென்னை.

நம்பிக்கையுள்ள - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிருர்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணுரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.



உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணுடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணுடிகள் எப்பொழுதும் கைவசமிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணுடி வியாபாரிகள், நெ. 9. பிராட்வே, சென்னை.



# வர்த்தமானம்

“கடந்த வொரு வருஷத்தில் அரசியல் குற்றத்திற்கெனத் தண்டனை அடைந்தவர்களில்17,000பேர் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளார். இன்னும் விடுதலை பெறுதவர்களின் தொகை 2000. இவர்களும் சீக்கிரத்தில் விடுவிக்கப்படலாம்” என்று தெரிகின்றது.

***

தென்மஹாராஷ்டிர ரயில்வேக் கம்பெனியார் ரயில்வே கட்டணத்தை உயர்த்திவிட்டபடியால், பம்பாய் வாசிகளில் பலர், முதல் இரண்டாவது வகுப்புக்களில் இனிப் பிரயாணம் செய்வதில்லை என்று தீர்மானம் செய்துள்ளார் என்றும், இப்பொழுது மூன்றுவது வகுப்பில்தான் பிரயாணம் செய்கின்றனர் என்றும் பம்பாய்ச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

கோயம்புத்தூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்துள்ள போத்தனூரைச் சேர்ந்த வள்ளுர் என்னும் கிராமத்தில் சிறுவர் சிலர் மண்ணைத் தோண்டி விளையாடிக்கொண்டிருந்தபொழுது ஒரு பையன் கையில் மண்சட்டி ஒன்று அகப்பட்டதாம். அச்சட்டியினுள் 121 பழைய ரோமன் நாணயங்கள் இருந்தனவாம். அவை ஆக்டேவியஸ் வீஸர் காலமுதல் கான்ஸ்டண்டைண்வீஸர் காலம்வரை வழங்கிவந்த நாணயங்களாம். அவைகளில் 18 நாணயங்களில் சக்கரவர்த்திகளின் உருவங்கள் தெளிவாக இருக்கின்றன. மற்றவை தேய்ந்துள்ளன. இன்றைக்கு 80 வருடங்களுக்கு முன் இதே ஊரிலிருந்து இந்நாணயங்கள் அகப்பட்டன.

***

தஞ்சைக்கு ஐந்து மைலுக்கு அப்பால் உள்ள திட்டையென்னு மிடத்திலுள்ள பாடல்பெற்ற சிவாலயம் ஜீர்ணமாயிருக்கின்றது. அச் சிவாலயச் சீர்திருத்த வேலை செய்ய, பலவான்குடி சிவநேசச் செல்வரும், சிவநேசன் பத்திரிகையின் ஆசிரியருமான ஸ்ரீ, ராம கு. ராம இராமசாமிசெட்டியார் அவர்கள் முன் வந்துள்ளார். திருப்பணிக்குரிய காரியங்கள் நடந்துவருகின்றன. திருக்கோயிலைச் சேர்ந்து தமிழ்ப் பாடசாலை ஒன்று நிறுவப்படும்.

***

அன்னிய ஆடைப் பகிஷ்கார விஷயமாய்ப் பம்பாய் ஆலைச் சொந்தக்காரர்களுடன் காந்தி அடிகள் செய்து கொண்டுள்ள திட்ட விவரம் வருமாறு:—

இந்தியாவிலுள்ள அன்னிய ஜவுளிகள் யாவற்றையும் வாங்கி அவற்றைத் தென்னுப்பிரிக்கா இராக் போன்ற வெளிதேசங்களுக்கு அனுப்பிக் குறைந்த விலையில் விற்றுவிடுவதன்பொருட்டு ஓர் ஏஜென்சியை ஏற்படுத்துவது. இந்தியாவில் கையிருப்பிலுள்ள பரதேசித் துணிகளை அயல்நாடுகளில் குறைந்தவிலைக்கு விற்பதனுல் ஏற்படும் நஷ்டத்தைத் தாங்கமுடியாத நிலையிலிருக்கும் வியாபாரிகளின் நஷ்டத்தில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வது.

காங்கிரசினுல் தடைப்படுத்தப்படாத துணியை மாத்திரம் விற்கின்ற வியாபாரிகளுக்கு நற்சாட்சிப் பத்திரம் அளிப்பது.

காங்கிரசினுல் தடுக்கப்படாத இந்திய ஆலைகளின் நூலைக்கொண்டு கைத்தறியில் நெய்யும் துணிகளுக்கு நற்சாட்சிப்பத்திரம் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

***

1929-ம் ஆண்டில் அமெரிக்கா ஐக்கிய நாட்டில் இரண்டரை கோடி மோட்டார் வண்டிகள் இருந்தனவென்று கணக்கிட்டிருக்கின்ருர்கள். அதாவது அந்தநாட்டு ஜனத்தொகையில் ஐந்து பேருக்கு ஒரு வண்டி வீதம் அங்கே மோட்டார் வண்டிகள் இருக்கின்றன. இந்த மோட்டார்களால் மேற்படி 1929-ம் ஆண்டில் இறந்தவர்களின் தொகை முப்பது ஆயிரம்! காயமடைந்தவர்கள் மூன்று லட்சம் பேர்!

இங்கிலாந்தில் பத்து வருஷங்களுக்குமுன் வீதிகளில் ஏற்படும் மோட்டார் விபத்துக்கள் ஆண்டொன்றுக்கு அரைலட்சம் வீதம் இருந்தன. இப்பொழுது ஒன்றரை லட்சத்திற்கு மேல் ஏறிவிட்டனவாம்.

***

இந்திய மித்திரன்: ஸ்ரீமான், B. வேணுகோபாலன் அவர்களை ஆசிரயராகப் பெற்று, ஐக்கிய மலாய்நாட்டு ஈபோ என்னும் இடத்திலிருந்து வெளிவரும் ‘இந்திய மித்திரன்’ என்னும் வாரப் பத்திரிகையின் இதழொன்று வரப்பெற்ருேம். அதனிலடங்கிய விஷயங்களிலிருந்து, இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் நடைபெறுகின்ற வார்த்தமானங்களைத் தெளிவாகவும் விவரமாகவும் வரைந்தளிக்க வல்லது இப்பத்திரிகை என்பது தெரிகின்றது. நாவல் பகுதியும் ஒன்று இதனில் இருப்பதை வாசகர்கள் விரும்புவார் என்பதற் கையமில்லை. இதன் வருடசந்தா, மலாய் நாட்டிற்கு 4-வெள்ளியும், இந்தியா, பர்மா முதலிய இடங்களுக்கு 5-வெள்ளியும் ஆகும். இப்பத்திரிகையின் கார்யாலயம், நெ. 87, பெல்பீல்ட் தெரு, ஈபோ, பிராக், F. M. S.

***

கடந்த 10-3-'31. செவ்வாய் மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் சுன்னுகத்திலுள்ள சின்னவர் பெண் தங்கம் என்பவர் ஓர் ஆண் மகவினைப் பெற்று இரவு 3-30 மணியளவில் உயிர் துறந்தனரென்றும் அடுத்த நாட் புதன்கிழமை இரவு கனவிற்ருேன்றித் தனது மூத்தமகளை விளித்து “பிள்ளையே! நானிவ்விடம் மூன்று நாட்கள் தங்கிப் பின் சுகமாயிருக்கப் போகிறேன்; நீங்கள் அழுது எனக்கு ஆக்கினை கொடாதீர்கள்” என்று கூறிவிட்டுத் தான் பணஞ் சேகரித்து வைத்த இடத்தைக் குறிப்பிட்டதுடன் அணிந்திருந்த நகைகளில் காப்பைமாத்திரம் மகளை அணிந்துகொள்ளும்படியாயும் மற்றவைகளை விற்றுத் தனது மரணச் செலவுகளைத் செய்யும்படியும் தனது குழந்தையை மாமியாரிடம் ஒப்புவிக்கும்படியாகவும் கூறி மகளையும் முத்தமிட்டுச் சென்றனராம். குறிப்பிட்ட இடத்திற் பார்த்தபோது பணமிருக்கக் கண்டெடுத்ததாகவும் அந்த இடம் முன்னெருபோதும் அறியப்படாத இடமென்றும் க. சீனிவாசம் என்பவர் தெரிவிக்கிருர்.

காலஞ்சென்ற எம். ஸி. நஞ்சுண்டராவின்
இணையற்ற மருந்துகள்
பண்டாரம்ஸ் மூலிகை மாந்த எண்ணெய்.

தாய்மார்களிடம் இம்மருந்து அவசியம் இருக்க வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்களுக்கு யாதொரு பயமுமின்றிக் கொடுக்கக்கூடிய பேதிஎண்ணெய் இதுவே. வயிற்று ஜீரணகாரிகளில் ஏற்படும் கோளாறுகளே குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகள் பலவற்றிற்கு முக்கிய காரணம். இவ்வியாதிகளை நீக்குவதில் இம் மாந்த எண்ணெய் இணையற்றது. இந்த எண்ணெயை உபயோகித்துவரக் குழந்தைகளுக்கு யாதொரு வியாதியும் அணுகா. ஒரு அவுன்ஸ் புட்டி அணு 12.

விபர காட்லாக் இனம்.

எம். ஸி. என்ஸ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49. சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

188910
3L
M211, N28KN
YB1'4'12

KALANILAYAM. REG. No. M. 2324.


## அறிக்கை.

பிரசித்திபெற்ற வடுவூர். K. துரைசாமிஐயங்கார் நாவல்களைக் கே. விஜயம் கம்பெனி யாரிடமிருந்து காபிரைட் சுதந்திரத்துடனும் ஷை கம்பெனியார் இதுவரையில் அச்சிட்டு வியாபாரம் செய்துவந்த நாவல்கள் அனைத்தையும் நாங்கள் விலைக்கு வாங்கியுள்ளோம். ஆதலால் இனி ஷை நாவல்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட எமது விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பி. இரத்தின நாயகர் & சன்ஸ், புஸ்தக வியாபாரி,
41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி மதராஸ்.



33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்

வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

## ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மலபந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரக்த சோகை, அஜீர்ணம், ஆமாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரக்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையுங் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெறுகச் செய்கின்றது.

கேட்லாக் இனும்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபாற் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"



## ஸ்ரீமத் உ. வே. பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிய உரைப் புத்தகங்கள்.

முதலாயிரம்.

| | | | |
|---|---|---|---|
| 3-வால்யூம்களாக காலிகோபயிண்டு விலை ரூ. | 10 | 0 | 0 |
| (முதலாயிரம் 6-வால்யூம்) | | | |
| திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி ,, | 3 | 0 | 0 |
| திருப்பாவை ,, | 1 | 4 | 0 |
| நாச்சியார் திருமொழி ,, | 1 | 12 | 0 |
| பெருமாள் திருமொழி ,, | 1 | 8 | 0 |
| திருச்சந்த விருத்தம் ,, | 1 | 8 | 0 |
| திருமாலை, திருப்பள்ளியெழுச்சி அமலனுதிபிரான், கண்ணி நுண் சிறுத்தாம்பு ,, | 1 | 4 | 0 |

2-வது ஆயிரம்

| | | | |
|---|---|---|---|
| பெரிய திருமொழி (1, 2 பத்துக்கள்) ரூ. | 3 | 0 | |
| ,, (3, 4, 5 ,, ) ,, | 3 | 8 | 0 |
| ,, (6, 7, 8 ,, ) ,, | 3 | 8 | 0 |

3-வது ஆயிரம் (இயற்பா)

| | | | |
|---|---|---|---|
| பெரிய திருமொழி (9, 10, 11 பத்துக்கள்) அச்சில். | | | |
| முதல் வால்யூம் (1,2,3,4 திருவந்தாதிகள் ரூ. | 4 | 8 | 0 |
| 2-வது (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி) ,, | 4 | 0 | 0 |
| 3-வது (திருவெழுக்கூற்றிருக்கை திருமடல்கள், இராமாநுச நூற்றந்தாதி) ,, | 3 | 0 | 0 |
| இராமாநுச நூற்றந்தாதி ,, | 1 | 0 | 0 |
| ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரம் ,, | 1 | 0 | 0 |
| ஸ்ரீவசந பூஷண ஸாரம் ,, | 1 | 4 | 0 |
| கூரத்தாழ்வான் வைபவம் ,, | 0 | 4 | 0 |
| ஸ்ரீ முகுந்த மாலை ,, | 0 | 6 | 0 |

திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை ஆபீஸ்,
32, பந்தர் தெரு, மதராஸ்



## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணு 12.

3. கம்பராமாயணம்.பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணு 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.



## : : பிரபல ஜோதிஷர் : :

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணு 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)